பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

29.07.2009 - மலர் 06, இதழ் 21





## காலநிலையை ஆராயும் இடம்

## தாவரங்களில் பரவியுள்ள வெண்முட்டைப் பூச்சி

## கிரகணங்கள் பூமிக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?

இலட்சக்கணக்கிலான பணப்பரிசு

## மின்சாரத்தைச் சேமிப்போம் வாராந்த போட்டி

விபரம் உள்ளே...

## தொல்பொருள் ஆராய்ச்சிகள் நடைபெறும் விதங்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Rs. 25.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒல்லாந்தரின் தந்திரம்

ஒல்லாந்தர் இடங்களை மன்னரிடம் கையளிக்கும்பொழுது நிபந்தனைகளை விதிக்க யோசித்தனர். அதாவது, ஐரோப்பாவில் வேறொரு இனத்தவர் இலங்கைக்கு வந்தால் அல்லது மன்னர் மற்றொரு இனத்தவருடன் கொடுக்கல் வாங்கலை ஆரம்பித்தால், தாம் கையளித்த இடங்களை மீளப் பெறவேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இதனால், தாம் கைப்பற்றிய இடங்களை மன்னர் கடனைச் செலுத்தியபின் கையளிப்பதற்கு எண்ணினார். யாழ்ப்பாணமும் மன்னாரும் தங்களுடையதே என ஒல்லாந்தர் தீர்மானித்தனர். அதனால், அவை குறித்து யாரும் கேள்வி எழுப்பமுடியாது போன்ற எண்ணங்களில் ஒல்லாந்தர் இருந்தனர். அவ்வாறு சிந்தித்து அதற்கேற்ற வகையில் எல்லைகளைக் கையாளவும் எண்ணினர்.

இரண்டாம் இராஜசிங்க மன்னர் முழு நாட்டினதும் மன்னர் என்பதால் முழுத் தீவிற்கும் உரித்துடையவரானார். ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட இடங்களின் உண்மையான உரிமையும் அவருக்கே இருந்தது. அரசரும் அது குறித்து எப்பொழுதும் தமது கருத்துக்களை வெளியிட்டார். ஒல்லாந்தர் ஒப்பந்தங்களை மீறும் ஒரு இனத்தவர்கள் என மன்னர் இராஜசிங்கன் எண்ணினார்

அரசன் ஒல்லாந்தருடன் சமாதானமாக இருந்த காலத்தில் அவர்கள் கைப்பற்றி அனுபவித்த இடங்களும் கோட்டையும் தமதே என எண்ணினார். ஒல்லாந்த சங்கம் தமது வேலையாட்கள் என்றும் ஆள்பதியானவர் தன் கீழ் இருப்பவரா கவும் கருதினார். அவர்களும் தந்திரம் மிகுந்தவர்கள். அது குறித்து பொருட்படுத்தவில்லை. அவர்களால் எழுதப்பட்ட கடிதங்களிலும் அதற்கு சமனான சொற்களும் வசனங்களுமே பயன்படுத்தப் பட்டன. மன்னருக்கும் உள்விவகாரங்களில் பிரச்சினைகள் தலையெடுத்ததால் ஒல்லாந்தர் பற்றி மன்னர் பெரிதும் அக்கறை எடுக்கவில்லை. அதற்கு நேரமும் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12,000 ஆசிரியர்களுக்கு

# நிரந்தர நியமனம் வழங்குவதில் சிக்கல்

க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத 12,000 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது பிரச்சினைக்குரிய விடயமாகவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



தெரிவித்துள்ளார். 1985/1989 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில்

12,000 ஜனசவியாளர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர், ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்ன பண்டாவின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பாடசாலை மாணவர்களுக்கான செய்மதி தொலைக்காட்சி அலைவரிசை

*கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் என்பன இணைந்து, 'டயலொக்' நிறுவன அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கான செய்மதி தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை ஆரம்பித்துள்ளது.*

*'நெனச' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த செய்மதி தொலைக்காட்சி அலைவரிசையினூடாக இலங்கையிலுள்ள 1000 இற்கும் மேற்பட்ட கிராமியப் பாடசாலைகள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அப்பாடசாலை மாணர்கள் இந்த நவீன கற்பித்தல் முறையினூடாக சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.*

## முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல்:—

# நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் தேர்தல் டாப்பினை ஆராயுமாறு ஆலோசனை

அடுத்த வருடம் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சையை ஆரம்பிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரிகளின் வதிவிடங்களை உறுதி செய்யும்முகமாக தேர்தல் வாக்குரிமையுள்ள பெயர்ப்பட்டியலை ஆராயுமாறு கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

தேர்தல் வாக்குரிமைப் பெயர்ப்பட்டியல் உள்ளடக்கப்பட்டுள்ள இறுவட்டினூடாக விண்ணப்பதாரியின் வதிவிடம் உறுதிப்படுத்தப் படவேண்டும். வதிவிடம் உறுதிப்படுத்தப்படாத நிலையில், பாடசாலைக்கு அருகில் வசித்தல் என்பதன் அடிப்படையில் குறித்த விண்ணப்பதாரியை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதைத்



தவிர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவத்தில் பொய்யான விபரங்கள் மற்றும் பத்திரங்கள் இணைக்கப்பட்டிருப்பின் அவை ரகசியப் பொலிஸாருக்கு கையளிக்கப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

பாடசாலை மற்றும் வதிவிடம் என்பனவற்றை உறுதி செய்து கொள்வதற்கு புவிச்சரிதவியல் திணைக்களத்தின் வரைபடத்தைப் பயன்படுத்துவது பொருத்தமாக அமையும் என கல்வி அமைச்சினால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பிள்ளைகளை அனுமதித்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நெறிமுறை தவறாது நடத்தப்பட வேண்டும் எனவும் ஏமாற்று வேலைகளுக்கு இடமளிக்கக்கூடாது எனவும் கல்வி அமைச்சு மேலும் அறிவுறுத்தியுள்ளது.

# தாவரங்களும் பேசிக்கொள்கின்றன

"நான் அரண்மனைத் தோட்டத்தில் உள்ள செடி, கொடிகளுடன் பேசுகின்றேன். நான் பேசும்போது அவை மலர்ச்சியுடன் காணப்படுகின்றன. என் பேச்சுக்கு அவை பதில் அளிப்பதையும் உணர முடிகிறது. இதுபற்றி ஆய்வு செய்யவேண்டும்" என்று 20 வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் கேட்டுக்கொண்டார்.

இவரது வேண்டுகோளை அடுத்து இது





சம்பந்தமான ஆய்வுகள் தொடரலாயின. இதற்காக வேண்டி ஷேக்ஸ்பியரின் கவிதைகள், இலக்கியங்கள் என்பன ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டு, செடிகளுக்கு அருகே ஒலி பரப்பப்பட்டன. பூந்தொட்டிகளுக்கு அருகில் ஹெட்போன்கள் வைத்து, தாவரங்களுக்குக் கேட்கும்படி செய்து பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இதனையடுத்து, செடிகளின் வளர்ச்சி,பலன்தரும் அளவு ஆகியவை கணிசமாக அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. இதுதவிர, இந்த ஆராய்ச்சியின்போது தாவரங்கள் சந்தோஷமான விடயங்களையும் துக்கமான விடயங்களையும் அவற்றுக்கு அருகில் உள்ள ஏனைய தாவரங்களோடு பகிர்ந்து கொள்கின்றன என்றும் கண்டறியப் பட்டது. உதாரணமாக, ஒரு செடியின் இலைகளை வெட்டுக்கிளியொன்று வெட்டும்போது குறித்த செடியின் பாகங்களில் ஏற்படும் ரசாயன மாற்றம் அதன் வேதனையை வெளிப்படுத்துகிறது. இந்தச் செய்தி அருகில் உள்ள செடிக்குக் கிடைத்ததும் தன்னையும் அந்த வெட்டுக்கிளி தாக்காத வண்ணம் (ரசாயன மாற்றங்களை ஏற்படுத்தி) அதன் பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்கின்றது.

அவ்வாறே, செடிகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான முறையில் தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றன. பூச்சிகளின் படையெடுப்பு, தேனீக்களின் வரிசை, மனிதனின் செயல்கள், விலங்குகளின் செயல்கள் என அனைத்தும் சத்தமில்லாமல் அவற்றுக்கிடையே பரப்பப்படுகின்றன என்பது தெரியவந்துள்ளது.

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH CORSE
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி ∴ வீண் கட்டணங்கள் இல்லை
* குரகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ / மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
பாடநெறியில் இணையும் அணைவருக்கும
அழகிய பேக் ஒன்றும் Tigo Sim (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
இந்த DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0817 918 981 / 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவள்ளுவர் சிலை

திருக்குறள், மனிதகுலம் என்றென்றும் ஒழுகத்தக்க வாழ்க்கை நெறிகளை உணர்த்திடும் ஓர் உலகப் பொதுமறையாகும். இது உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்ட ஒப்புயர்வற்ற நீதி இலக்கியமுமாகும். அத்தகைய நெறிகளை அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பிரிவுகளின் கீழ் 1330 குறட்பாக்களில் 133 அதிகாரங்களில் இவ்வையகத்துக்கருளிய திருவள்ளுவரை காலம்தோறும் மக்கள் நினைவு கூர்ந்து போற்றும் வகையில் கன்னியாகுமரி கடல் வெளியில் திருவள்ளுவரது முழு உருவச்சிலையை தமிழ் நாடு அரசு அமைத்துள்ளது.

## சிலையின் அளவுகள்

சிலையைத் தாங்கும் பீடம் 38 அடி. உயர்க்கட்டுமான பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள சிலையின் உயரம் 95 அடி. மொத்த உயரம் 133 அடி. சிலை அமைந்துள்ள பீடத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவரும் 'அணிமணி' மண்டபமும் அமைந்துள்ளன.

## சிலையின் அளவு காட்டும் தத்துவ விளக்கம்

பீடத்தின் 38 அடி உயரமானது அறத்துப்பாலின் 38 அதிகாரங்களைக் குறிப்பதாகவும் பீடத்தின் மேல்எழுந்து நிற்கும் 95 அடி உயர திருவள்ளுவர் சிலையானது பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களைக் குறிப்பதாகவும் திகழ்கிறது.

அறத்தை அடித்தளமாகக் கொண்டே பொருளும் இன்பமும் அமைந்திடல் வேண்டும் எனும் வாழ்க்கை நெறியை உணர்த்தும் 'வள்ளுவமாகவே' இச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சிலையின் விபரம்

| | |
|---|---|
| சிலையின் உயரம் | - 95 அடி |
| பீடத்தின் உயரம் | - 38 அடி |
| சிலையின் பீடமும் சேர்ந்து | - 133 அடி |
| முகத்தின் உயரம் | - 10 அடி |
| உடல் பகுதியின் உயரம் | - 30 அடி |
| தொடைப் பகுதியின் உயரம் | - 30 அடி |
| உச்சந்தலை, கழுத்து, முட்டி மற்றும் பாதமும் சேர்ந்து | - 10 அடி |
| கைத்தவழ் | - 10 அடி |
| சுவடியின் நீளம் | - 10 அடி |
| தோள்பட்டையின் அகலம் | - 30 அடி |
| சிலைப்பகுதி | - 5 அடி |
| ஆதார பீடம் | - உள்ளிட்ட சுவர் 60 அடி |

# பறவை அலகின் ரகசியம்

**தாவரங்கள் அவற்றுக்குத் தேவையான ஒட்சிசன் ($O_2$) மற்றும் காபனீரொக்சைட் என்பனவற்றை ($Co_2$) வளிமண்டலத்தில் இருந்து பெற்றுக்கொள்கின்றன. மனிதனுக்கும் தமக்குரிய உணவைப் பெற்றுக்கொள்ள உறுப்புக்கள் உள்ளன. பறவைகளும் அதேபோன்ற உயிரினங்களே. இவ்வாறு ஒவ்வொரு உயிரினத்துக்கும் தமக்குரிய உணவைப் பெற்றுக்கொள்ளத் தேவையான அவையவங்கள் அவற்றுக்கேயுரிய தனித்துவமான முறையில் அமைந்துள்ளன. அந்த அடிப்படையில் பறவைகளின் சொண்டு (அலகு) இலகுவாக உணவை கொத்தித் தின்பதற்கும் எதிரிகளிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் தேவையான வடிவில் அமைந்திருப்பதை நாம் அவதானிக்கலாம்**

## கழுகு



கழுகு ஒரு மாமிச உண்ணிப் பறவையாகும். இது விலங்குகளை வேட்டையாடுவதன் மூலம் தமக்குத் தேவையான உணவைத் தேடிக்கொள்கின்றது. வேட்டையாடிய விலங்கை இலகுவாக கொத்திக்கிழித்து அதன் இறைச்சியை உண்பதற்கு ஏற்ற வகையில் கழுகின் சொண்டு மிகவும் கூர்மையாக அமைந்திருக்கின்றது. இதற்கு மேலும் உதவியாக கழுகின் கால் விரல் நகங்கள் பலம்மிக்கதாகவும் கூர்மையாகவும் அமைந்துள்ளன.

## குத்துவாலி



பழங்களைக் குடைந்து எடுத்து உண்பதற்கும் நீரை அருந்துவதற்கும் ஏற்றவகையில் இதன் சொண்டு அமைந்திருக்கின்றது. ஆனாலும், இது நெல் குருவியின் சொண்டை விட சற்று நீளமாக உள்ளதால் தனது சொண்டை இரை உள்ள பகுதிக்குள் செலுத்தி தனது இரையைப் பெற்றுக்கொள்கின்றது.

## கிளி



உட்பக்கமாக வளைந்த வடிவில் மிகவும் கூர்மையாக கிளியின் சொண்டு அமைந்திருக்கின்றது. கிடைக்கும் பொருட்கள், தானியங்களை துகள்களாக கெறித்து இரையாக்குவதற்கு ஏற்ற வகையில் இது அமைந்திருக்கின்றது.

## நெல் குருவி



நெல் குருவியின் சொண்டு கூர் வடிவில் மிகவும் சிறியதாக இருக்கின்றது. தானியங்கள்ள இலகுவாக எடுத்து உண்பதற்கு ஏற்ற வகையில் அதன் சொண்டு அமைந்திருக்கின்றது.

## கொக்கு



இதன் சொண்டு நீளமாக இருக்கின்றது. ஓரளவுக்கு ஆழமில்லாத நீர் நிலைகளிலும் சதுப்பு நிலத்திலும் நின்றவண்ணம் அதில் இருக்கும் புழு, பூச்சிகளைக் கொத்தி எடுத்து இரையாக்கிக் கொள்ளக்கூடிய வகையில் இதன் சொண்டு நீளமாக அமைந்திருக்கின்றது.

## நாரை

நாரையின் சொண்டு கொக்கின் சொண்டை விட அகலமாக இருக்கும். அத்துடன், நீளமாகவும் இருக்கின்றது. நீர் நிலைகளில் நீந்தியவண்ணம் ஓரளவுக்குப் பெரிய மீனைக்கூட சரியாகப் பிடித்துக் கொள்ளும் வகையில் இதன் சொண்டு அமைந்திருக்கின்றது. சொண்டின் ஓரமாக உறை போன்ற பகுதி அமைந்திருப்பதால் பிடித்த மீன் எவ்வகையிலும் வெளியே பாயாமல் உள்ளே இழுத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கிறது.



-அமீர்.எச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவாக கிரகணங்கள் ஏற்படும் போதெல்லாம் பூமிக்குப் பேரழிவு ஏற்படலாம் என்ற பீதிகளுக்குப் பஞ்சமிருக்காது. ஆனால், இம்முறை அந்தப்பீதி இரட்டிப்பாகி இருக்கிறது எனலாம். கடந்த ஜூலை 6 ஆம் திகதி சந்திர கிரகணமும் 22 ஆம் திகதி சூரிய கிரகணமும் தோன்றியுள்ளன. அத்துடன், எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி மீண்டும் சந்திர கிரகணம் தோன்றவுள்ளமையே இந்த இரட்டிப்பு பீதிக்கான காரணங்களாகும். ஆக, 30 நாட்களுக்குள் 3 கிரகணங்கள்!**

# 30 நாட்களுள் 3 கிரகணங்கள்


சூரிய கிரகணம்

30 நாட்களுக்குள் 3 கிரகணங்கள் எப்படித் தோன்றுகின்றன? உண்மையில் இதனால் பூமியில் பேரழிவு ஏற்படுமா? என்பது பலரையும் குழப்பிக்கொண்டிருக்கும் விடயமாகும். எனினும், சூரிய கிரகணமும் சந்திர கிரகணமும் தோன்றுவது வானில் நடைபெறும் சாதாரண நிகழ்வே.

## சூரிய கிரகணம்

சூரியன்-சந்திரன்-பூமி ஆகியவை ஒரே நேர்கோட்டில் அமையும்போது 'சூரிய கிரகணம்' ஏற்படுகிறது. சூரியனுக்கு முன்னால் நேர்கோட்டில் நகர்ந்து வரும் சந்திரனின் நிழல், பூமியின் மீது விழும். அப்போது சூரியனை சந்திரன் மறைக்கும். இதுவே சூரிய கிரகணமாகும்.

## சந்திர கிரகணம்

சந்திரன் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு, பூமியையும் நீள்வட்டப்பாதையில் சுற்றுகிறது. இச்சுழற்சியின்போது, சூரியன்-பூமி-சந்திரன் ஆகியவை நேர்கோட்டில் அமையும். சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே பூமி வரும்போது, சூரியனின் ஒளி சந்திரனில் படாமல் மறையும். இதுவே சந்திர கிரகணமாகும்.

## அடுத்தடுத்து கிரகணங்கள்

குறிப்பிட்ட சில நாட்களுக்குள்ளேயே இரண்டு அல்லது மூன்று முறைகளுக்கு கிரகணங்கள் தோன்றக்கூடும். மிக அரிதாகவே இந்த நிகழ்வுகள் நடக்கின்றன. இதற்கும் காரணம் உள்ளது. சராசரியாக ஓராண்டில் 5 சூரிய கிரகணங்கள், 2 சந்திர கிரகணங்கள் ஏற்பட வேண்டும். கிரகணங்கள் அமாவாசை, பௌர்ணமியை ஒட்டியே வரும். அமாவாசை, பௌர்ணமி 15 நாட்களுக்குள் வருவதைப் போல சந்திர கிரகணமும் சூரிய கிரகணமும் 15 நாட்களுக்குள் ஏற்படலாம்.

தீர்க்க ரேகையில் சூரியனுக்கு 23° கோணத்தில் பூமி சாய்ந்திருக்கும். இதற்கு ஏற்றப்புள்ளி-இறக்கப்புள்ளி என்று பெயர். இந்தப் புள்ளிகளில் சூரியன்,சந்திரன் நிலைகொள்ளும்போது அடுத்தடுத்து சூரிய மற்றும் சந்திர கிரகணங்கள் தோன்றும். இது ஒரு வான் நிகழ்வுதான். ஆனால், அபூர்வமாகவே நிகழும்.

## பூமியில் பேரழிவு ஏற்படுமா?


மகாபாரதப் போர்


ஹிரோஷிமா அழிவு


துவாரகை பகுதி

## கிரகணங்கள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத் தெரியுமா?

கிரகணங்கள் உலகின் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத் தெரியாது. ஓரிடத்தில் முழுமையாக இருக்கும். இன்னோர் இடத்தில் பகுதியாகத் தெரியும். இன்னும் சில இடங்களில் கால் பங்குதான் தெரியும். முழு சூரிய கிரகணம், முழு சந்திர கிரகணம் தெரிந்த ஓரிடத்தில் மீண்டும் முழு சூரிய கிரகணம் மற்றும் சந்திர கிரகணம் தெரிய 360 ஆண்டுகள் வரை ஆகும்.

## கிரகணங்கள் ஏற்படும்போது பூமியில் பேரழிவு ஏற்படுமா?

கிரகணங்கள் ஏற்படும்போதெல்லாம் பூமியில் பேரழிவு ஏற்படும் என்ற கருத்து பலரிடமும் நிலவி வருகிறது. அதுவும் குறிப்பிட்ட சில நாட்களில் இரு முறையோ, மும்முறையோ அந்த கிரகணங்கள் ஏற்படும்போது அந்தப் பீதி இரட்டிப்பாகும் என்பதில் சந்தேகமில்லை. இரண்டு அல்லது மூன்று கிரகணங்கள் தொடர்ந்து தோன்றிய காலத்தில் உலகின் பல்வேறு பாகங்களிலும் பல விபரீதங்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.


சந்திர கிரகணம்

கி.மு 3076 ஆம் ஆண்டில் மகாபாரதப் போர் நடந்தது.கி.மு 3031 இல் துவாரகை பகுதி கடலில் மூழ்கியது. கி.பி 1910 மற்றும் 1945 ஆண்டுகளில் முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் நடந்தன. ஹிரோஷிமா-நாகசாகியில் அணுகுண்டுகள் வீசப்பட்டன என்று அந்தப் பட்டியல் விரிகின்றது.

நிகழ்வுகள் இப்படி நடந்திருக்க, 2009 முதல் 2020 வரை 6 முறை அடுத்தடுத்து 2 அல்லது 3 கிரகணங்கள் தோன்ற இருப்பதாகக் கூறுகின்றனர் விஞ்ஞானிகள். இந்த காலகட்டத்தில் போர் அல்லது பேரழிவு ஏற்படுமா? என்றால் அதற்கு ''இல்லை'' என்றே வானவியல் ஆராய்ச்சியாளர்கள் பதில் தருகின்றனர்.

அதுகுறித்து மேலும் கூறுகையில், ''ஒரு சம்பவம் ஏற்பட்டபோது, கிரகணங்கள் ஏற்பட்டிருக்கலாம்.இது எதிர்பாராமல் நடக்கும் விஷயங்கள். இதை வைத்து கிரகணம் ஏற்பட்டதால்தான் அந்த நிகழ்வு ஏற்பட்டது என்று கூறுவது தவறு. 1999 இல் இரண்டு கிரகணங்கள் 15 நாட்களுக்குள் ஏற்பட்டன. அதன்போது பூமி,சூரியன், சந்திரன், வியாழன், வெள்ளி என 5 கோள்கள் ஒரே நேர்கோட்டில் அணிவகுத்தன. அப்போதும் பேரழிவு நிச்சயம் என்று கூறினார்கள். ஆனால், எந்த அழிவும் ஏற்படவில்லை. சூரியனில்தான் ஈர்ப்பு விசை மிக அதிகம். சூரியனோடு ஒப்பிடும்போது, மற்றைய கோள்களில் 0.2 சதவீதம் மட்டுமே ஈர்ப்பு விசை உள்ளது. ஈர்ப்பு விசை இல்லாமல் பூமியில் பேரழிவு என்பது நடக்கவே நடக்காத ஒன்று'' என வானவியல் ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## ஜூலை 22 ஆம் திகதி சூரிய கிரகணத்தின் சிறப்பு

இறுதியாக 1999 இல் அடுத்தடுத்த சில தினங்களில் 2 கிரகணங்கள் தோன்றியுள்ளன. இதன்பின் இப்போது 3 முறை கிரகணங்கள். இதில், ஜூலை 22 ஆம் திகதி ஏற்பட்ட சூரிய கிரகணத்துக்குப் பல சிறப்புகள் உள்ளன. 500 ஆண்டுகளுக்குப் பிறகு அதிக நேரம் நீடித்த சூரிய கிரகணமும் 21 ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட சூரிய கிரகணமும் இதுவே. இந்த சூரிய கிரகணம் 6 நிமிடங்கள் 39 செக்கன்கள் வரை நீடித்தது. நீண்ட சூரிய கிரகணத்தை கிழக்கு சீனா, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதன்பின் 2049 ஆம் ஆண்டுதான் அதிகளவு நீடிக்கும் சூரிய கிரகணம் ஏற்படும்.


சூரிய கிரகணத்தை அவதானித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருளிய அகழ்வுகள் நிரூ வரலாறு

**நாம் கடந்தகால வரலாற்றை அறிந்து கொள்வதற்கான ஆதாரங்களாக வரலாற்று ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள், குறிப்புக்கள், கல்வெட்டுக்கள் மற்றும் புதைபொருள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்படும் எச்சசொச்சங்கள், அடையாளங்களைப் பயன்படுத்துகின்றோம். இதில் வரலாற்று மூலாதாரங்கள் என்ற வகையில் புதைபொருள் அகழ்வுகள் மூலம் கண்டெடுக்கப்படுகின்ற விடயங்கள் முக்கிய சான்றாக அமைகின்றன. எமது நாட்டில் பண்டைய மானிடப் பரம்பல் எவ்வாறு அமைந்திருந்தது. ருவன்வெலிசாய, அபயகிரிய போன்ற வரலாற்றை அறிவதற்கு புதைபொருள் அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் பிரதான சான்றுகளாக அமைகின்றன. இவற்றில் மனித எலும்புக்கூடுகள், மிருகங்கள், தாவரங்களின் கலங்கள், மட்பாண்டங்கள், நாணயங்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள், உலோகப் பொருட்கள் என்பன முக்கிய சான்றுகளாக அமைகின்றன.**

## புதைபொருள் (தொல்பொருள்) அகழ்வு

கடந்த காலம்பற்றி விஞ்ஞான பூர்வமாக, ஆய்வுரீதியாக அறிந்து கொள்வதே 'புதைபொருள் ஆராய்ச்சி' (Archeology) ஆகும். அகழ்வுகளின் போதும் அகழ்வுகளின் பின்னர் கண்டுபிடிக்கப்படுகின்ற தொல்பொருளியல் கண்டுபிடிப்புக்களின்போதும் வரலாற்று உண்மைகளை உறுதி செய்து கொள்வதற்காக வரலாற்றுக் குறிப்புக்கள், நூல்கள் துணையாகக் கொள்ளப்படுகின்றன. புதைந்துள்ள தடயங்களைக் கண்டறிதல், அதற்காக வரலாற்றுக் குறிப்புக்களைப் பயன்படுத்தல் உறுதிப்படுத்திக்கொள்ளல், அதன்பின்னர் வரலாற்று மூலாதார அடிப்படையில் உண்மைகள் உறுதிப்படுத்தப்பட்டு வரலாறாகக் கட்டியெழுப்பப்படுகின்றது.

பண்டைய காலத்தின் குறிப்பான எழுத்துக் கலை வளர்ச்சியடைவதற்கு முற்பட்ட காலத்தின் வரலாறு கூட இத்தகைய புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாக உலகப் புகழ்பெற்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் கதரீன் கென்யான் குறிப்பிடுகின்றார். இங்கு பண்டைய மானிடவியலின் ஆரம்பம். வளர்ச்சி, வாழ்க்கை முறை சமூகத் தொடர் பாடல் போன்ற கற்பனைக்குப் புலப்படாத தகவல்களை கண்டறிவதற்கு புதைபொருள் ஆராய்ச்சி பயன்படுகின்றது.

## கற்கால வரலாற்று யுகம்

எழுத்துக்கலை உருவாவதற்கு முற்பட்ட காலப்பகுதி 'கற்காலம்' என்றழைக்கப்படுகிறது.இக்காலப் பகுதிக்குரிய மானிடவியல் பற்றிய ஆராய்ச்சியானது கடினமானதாகும். அந்தக் காலப்பிரிவுக்குட்பட்ட மானிட இனத்தின் தோற்றம், வளர்ச்சி, நடத்தை பற்றி அறிவதற்கான சான்றுகள் அழிந்து போய்விட்டன. ஆயினும், கிடைத்துள்ள ஓரளவான சாட்சியங்கள் புதைபொருள் அகழ்வுகள் மூலமே பெறப்பட்டுள்ளன. அக்காலப் பகுதிக்குரியதாகக் கருதப்படும் கற்களாலான தளபாடங்கள், ஆயுதங்கள் என்பனவே அக்காலத்தில் வாழ்ந்த மனிதன் பற்றிய தகவல்களை ஓரளவுக்காவது புலப்படுத்த உதவுவதாக உள்ளன. இலங்கையில் பாஹியன்கல, குருவிட, பட்டதொம்ப போன்ற இடங்களில் உள்ள கற்குகைகளில் கற்கால மானிட நடத்தை பற்றி அறிவதற்கான சில சான்றுகள் பாதுகாப்பாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## புதைபொருள் அகழ்வு

பண்டை காலப்பகுதிக்குரிய ஆதாரபூர்வமான நிரூபிக்கத்தக்க சான்றுகளை நிலத்திற்குக் கீழ் இருந்து கண்டெடுக்கப்படும் எச்சசொச்சங்களில் இருந்து பெறுவது 'புதைபொருள் அகழ்வு' என்றழைக்கப்படுகிறது.

''சகலவிதமான அகழ்வுப் பணிகளும் அழிவுக்குரிய நடவடிக்கைகளாகும்'' என்று சிரேஷ்ட புதைபொருள் ஆராய்ச்சியாளர் மோடிமர்விலன் குறிப்பிட்டுள்ளார். புதைபொருள் ஆராய்ச்சியின்போது மேற்தட்டில் இருந்து கீழ்தட்டு வரையில் அகழப்பட்டு தடயங்கள் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுவதால் நிலத்துக்கடியில் உள்ள இன்னும் பல அரிய பொக்கிஷங்கள் அழிந்து விடுகின்றன. அவற்றை மீண்டும் பெறமுடியாது. அதனால், புதைபொருள் ஆராய்ச்சியின்போது ஒரு தேவைக்காக இன்னும் பல விடயங்கள் அழிந்து போகும் பாதிப்பைத் தடுக்க இயன்றவரை முன்கூட்டிய நடவடிக்கைகள் அவசியமென்று அவர் கூறுகின்றார். அதன் காரணமாகவே இவ்வாறு புதைபொருள் அகழ்வானது ஒருவகையில் அழிவை நோக்கியது என்று கூறப்படுகின்றது.





## அகழ்வின் வகைகள்

எல்லா அகழ்வின்போதும் நிலத்திற்கு மேலும் நிலத்திற்கடியிலும் புதையுண்டுள்ள பல தடயங்கள் சிதைவடைந்து அழிந்து விடாமல் இருக்க வெவ்வேறு விதமான அகழ்வுகள் அல்லது பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆராய்ச்சிக்கான அகழ்வு:**

ஆராய்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கற்கால மற்றும் பண்டைய காலப்பகுதிக்குரிய தகவல்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்த அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது.

**அவசர அகழ்வு:**

ஏதாவது அபிவிருத்திப் பணியொன்றை மேற்கொள்வதற்கு முன்னர் அப்பகுதிகளில் ஏதாவது தகவல்கள் கிடைக்குமா என்ற நோக்கில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய அகழ்வுகள் குறிப்பாக புதைபொருள் ஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளிலேயே மேற்கொள்ளப்படுவதுண்டு. அத்துடன், அபிவிருத்திப் பணிக்காக அப்பகுதி நிலம் பயன்படுத்தப்படும்போது புதைந்துள்ள வரலாற்று மூலாதாரங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் காரணமாக இத்தகைய அவசர அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**முக்கியத்துவத்தின் அடிப்படையிலான அகழ்வுகள்:**

தேசிய முக்கியத்துவத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகள் இத்தகைய வகையில் அடங்கும். இத்தகைய இடங்களில் கண்டுபிடிக்கப்படும் தடயப் பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்படும்.

## புதைபொருள் அகழ்வாராய்ச்சிக்கு முன்னர்


அகழ்வாராய்ச்சி மேற்கொள்வது வரலாற்று மூலாதாரத்தைக் கண்டறிந்து உண்மையைக் கண்டறிவதற்காகும்.



குருவிட்ட பட்டதொம்ப அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவ்வாறன்றி எந்தவிதமான நோக்கமும் இல்லாமல் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்வது தேசிய ரீதியாக நாசம் விளைவிப்பதாகும். அதனால், அகழ்வுப் பணிக்கு முன்னர் குறிப்பிட்ட அகழ்வு தொடர்பாக திட்டமிடாமல், வரைபடம் என்பன தயார் படுத்தப்படும். அதன்பின்னர் புதைபொருள் ஆராய்ச்சி ஆணையாளரின் அனுமதி பெறப்படவேண்டும். இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின்னரே புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபடும் நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள் இப்பணியில் ஈடுபடுகின்றனர்.

## உங்களுக்குத் தெரியுமா?

அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படும் பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். வரலாற்றாசிரியர்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரின் கண்காணிப்பின் கீழேயே இந்த அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதைபொருள் அகழ்வு மேற்கொள்ளப்படும் பிரதேசத்தின் முக்கியத்துவத்திற்கேற்ப ஆராய்ச்சி முன்னோக்கித் தொடர்ந்து கொண்டே செல்லும்.

## அகழ்வு முறை

அகழ்வு முறைகள் பல உண்டு. விஞ்ஞான தொழில்நுட்ப முறைகளுக்கு ஏற்ப இந்த அகழ்வு முறைகளிலும் மாறுதல்கள் இடம்பெற்றுள்ளன.

- சுற்றி வளைப்பு வலைமுறை.
- பருவகால முறை.
- அங்குல முறை.
- திறந்த முறை.
- ஆராய்ச்சிக்கான முறை.
- பிளானம் அகழ்வு முறை

என்று புதைபொருள் அகழ்வு முறைகள் வேறுபடுகின்றன.

## தகவல்களைப் பதிவு செய்தல்

அகழ்வின்போது கண்டுபிடிக்கப்படும் மற்றும் ஒதுக்கப்படும் ஒவ்வொரு சிதைவும் எச்சமும் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். நிலத்திற்குக் கீழ் 1 அங்குல ஆழத்தில் கண்டுபிடிக்கப்படும் சிதைவுகள் 2000 வருடகால வரலாற்றின் மகிமைக்கு சான்று பகரக்கூடிய தகவல்களைக் கொண்டவையாகும். அதனால், இத்தகைய கண்டுபிடிப்புக்கள் புதைந்துபோன வரலாறு பற்றிய உண்மைகளைப் புலப்படுத்தும் சாட்சியங்களாகும். அதனால், கண்டுபிடிக்கப்படுகின்ற ஒவ்வொரு சிதைவு, தடயங்களையும் முறையாகப் பதிவு செய்து தகவல்களைச் சேகரித்தல், அவற்றைக் கொண்டு வரலாற்று மூலாதாரங்களாக உள்ள குறிப்புக்களுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்திக்கொள்ளல் என்பன மேற்கொள்ளப்படும்.

## தடயப்பொருட்களின் கால நிர்ணயம்

அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்படுகின்ற தடயப்பொருட்களை நன்கு ஆராய்ந்து அவை எத்தகைய காலப்பிரிவுக்குட்பட்டவை என்பதை அடையாளம் காண்பது முக்கிய பணியாகும். இவ்வாறு கண்டுபிடிக்கப்படுகின்ற தகவல்கள் முறையாகப் பட்டியல் படுத்தப்பட்டு விஞ்ஞான ரீதியான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விரிவாக ஆராயப்படும்.

## காலப்பிரிவை நிர்ணயிக்கும் முறை

அகழ்வுகளின்போது கண்டுபிடிக்கப்படும் எச்சங்கள் இரண்டு முறையில் கால நிர்ணயத்திற்கு உட்படுத்தப்படும்.

### அண்ணளவான முறை:


அகழ்வாராய்ச்சியின்போது ஒவ்வொரு காலப்பிரிவுக்கும் உரிய தடயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. மட்பாண்டங்கள், நிலக்கரி,கல் ஆயுதம் போன்றன கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை, வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்தவை, இடைப்பட்ட காலத்திற்குரியவை, நவீன காலத்திற்குரியவை என்று கால நிர்ணயம் செய்யப்படும் முறை ஒருமுறையாகும்.

### எதிர்பாராத காலப்பகுதி:

அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்படும் பொருட்கள் விஞ்ஞான ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு காலநிர்ணயம் செய்யப்படும் தடயங்கள், எதிர்பார்க்கப்படாத காலப் பிரிவுக்குட்பட்டவை என்று வகைப்படுத்தப்படுவது இரண்டாவது முறையாகும்.

## கண்டுபிடிக்கப்படும் தடயப் பொருட்கள்

கற்காலத்தில் வாழ்ந்தவையாக மனித, மிருக எலும்புக்கூடுகள், தாவர சுவடுகள் (மண், கல், ஓட்டு துகள்கள்), மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள், கட்டடக்கலை சிதைவுகள், கலைப் பொருட்கள் என்பனஅடங்கும். அவை எந்த சந்தர்ப்பத்திலும் அரும்பொருட்காட்சிசாலையில் பாதுகாப்பாகப் பேணப்படும்.





தருவிட்ட பட்டதொம்பலென அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்டவை

| | |
|---|---|
| m - சிறுகற்கள் | bs - எரிந்த தடயங்கள் (திரவங்கள்) |
| f - திருவானா | bb - எரிந்த சாம்பல் |
| sl - அழிவுற்ற சிதைவுகள் | cc - காரியம் |

அத்துடன், புதைபொருள் ஆராய்ச்சியின்போது புதைந்து காணப்படுகின்ற பொருட்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு அகழ்வை மேற்கொள்ளவும் பொருட்களை சுத்தப்படுத்தவும் பயன்படுத்தவும் விசேட உபகரணங்கள் உள்ளன.

## உலகில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான அகழ்வுகள்

1748- ஆம் ஆண்டு பொம்பே என்ற நகரம் கண்டுபிடிப்பு.

1891 - ஹோமே இரெக்டஸ் என்ற மானிடவர்க்கம் பற்றிய தகவல்கள்.

1922 -ஹொவாட் காடர் துதன்காமன் மம்மி கண்டுபிடிப்பு.

1940 - பண்டைய லாஸ்கோகஸ் கற்குகை ஓவியங்கள் கண்டுபிடிப்பு.

1974 - டொனல்ட் ஜோன்சன் மூலம் லுசி என்ற ஆதிவாசி பற்றிய தகவல்கள் கண்டுபிடிப்பு.



## இலங்கையில்...

இலங்கையில் முதன்முதலாக 1890 ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் புதைபொருள் ஆராய்ச்சி ஆணையாளராக நியமிக்கப்பட்ட எச்.சி.பி பெல்லின் தலைமையில் அநுராதபுரத்தில் அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் பேராசிரியர் செளரத் பரணவிதாரன புதைபொருள் ஆராய்ச்சி ஆணையாளராகிய பின்னர் புதைபொருள் ஆராய்ச்சிப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

பாஹியன் கல, கிதுல்கல, பெலிலென, குருவிட, பட்டதோம்பலென போன்ற இடங்களிலும் கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் அநுராதபுரம்,பொலன்னறுவை, தம்புள்ள ஆகிய பிரதேசங்களிலும் அகழ்வுகள் நடைபெறுகின்றன.

## பிரதிபலன்

இத்தகைய அகழ்வுகளின் போது கிடைத்த எச்சங்களின் உதவியுடன் பண்டைய மானிட வாழ்வு, பரிணாமம், நடத்தை, நடை, உடை, பாவனை, வாழ்க்கை, வரலாறு, நாகரிகம் உட்பட பலவிதமான தகவல்களை அறிந்துகொள்ள முடிந்திருக்கின்றது.

இவை பற்றிய தகவல்கள் தேசிய மரபுரிமை பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களாக பாதுகாக்கப்படுவதோடு, இலங்கையின் பண்டைய வரலாற்றை அறியும் முக்கிய மூலாதாரங்களாகவும் கொள்ளப்படுகின்றன.








**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்ளத் தயாராகுதல்


காட்டுத் தீ

**எந்தவிதமான முன் அறிகுறிகளுமின்றி அல்லது திடீரெனத் தோன்றுகின்ற ஏதேனும் பாதகமான சம்பவமே 'திடீர் அனர்த்தம்' எனப்படுகின்றது. திடீர் அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் திடீர் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைக்க முன்கூட்டியே மக்கள் விழிப்பூட்டப்பட்டிருக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.**

மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, வறட்சி, சூறாவளி, சுனாமி (பேரலை) போன்றவை திடீர் அனர்த்த நிலைமைகளாகும். இந்த அனர்த்தங்கள் இயற்கை மாற்றங்கள் காரணமாகவும் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட இயற்கைக்கு எதிரான மானிடச் செயற்பாடுகளின் தாக்கங்கள் காரணமாகவும் ஏற்படுகின்றன.

உதாரணமாக:

✱ காடழிப்புக் காரணமாக மழைவீழ்ச்சி குறைவடைந்து, வறட்சியும் அதன் விளைவாகப் பஞ்சமும் தோன்றுதல்.

✱ சரிவான பிரதேசங்களில் உள்ள தாவரப் போர்வை அகற்றப்படுவதன் காரணமாக மண்சரிவு ஏற்படுதல்.

✱ மண்சரிவின் விளைவாகப் பாய்ந்து செல்லும் மண் ஓடும் நீரினால் கழுவிச் செல்லப்பட்டு, ஆறுகளில் படிகின்றன. இதன் காரணமாக அதன் ஆழம் குறைவடைந்து, வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது.

✱ வெள்ளப்பெருக்கு காரணமாக மக்களின் உறைவிடங்கள் அழிந்து போய்விடும். பயிர்களின் விளைச்சல் அழிவடைந்து பஞ்சம் ஏற்படலாம்.

✱ வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதும் சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

✱ பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக காடுகளை அழிக்கும்போது தீ மூட்டப்படுவதனூடாக காட்டுத் தீ பரவுதல்.

✱ அத்துடன், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள்


சூறாவளி

தோன்றுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கக்கூடும். கடலலை காரணமாக கரையோரங்களில் ஏற்படுகின்ற தாக்கம் அதிகரிக்கப்பட பல்வேறு மானிடச் செயற்பாடுகள் காரணமாக அமைகின்றன.

இத்தகைய காரணங்களினால் இயற்கையாக ஏற்படுகின்ற அனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் அனர்த்தங்களின் தாக்கமும் அதிகரிக்கின்றது.

## இயற்கை அனர்த்தங்களைத் தடுக்கவும் தாக்கங்களைக் குறைக்கவும் பின்பற்றப்பட வேண்டிய உபாய முறைகள்

✱ நிலநடுக்கம் பற்றிய தகவல்களை 'ரிச்டர்' மானியில் இருந்து பெற்று அனர்த்தம் தொடர்பாக மக்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்கலாம்.

✱ வளிமண்டலவியல் திணைக்களத்தில் உள்ள கருவிகளிலிருந்து மழை, காற்று போன்ற வானிலை மாற்றங்கள் பற்றிய தகவல்களைப் பெற்று மக்களுக்கு அறிவித்தல் வழங்கி முன்னெச்சரிக்கையுடன் செயலாற்றலாம்.

✱ இயற்கை அனர்த்தங்கள் பற்றிய தொடர்பாடல் திறன்களை ஒரு சில விலங்குகள் கொண்டுள்ளன. அவ்வாறே, எதிர்காலத்தில் நிகழப் போகும் புயல்நிலைமை தொடர்பாக முன்கூட்டியே முடிவுகளைப் பெற்றுக்கொள்ள தாவரங்களின் அசைவுகளும் துணை புரிகின்றன.

✱ பறவைகள் மற்றும் ஏனைய ஒருசில விலங்குகளின் ஒலிகளுக் கிணங்க நிலநடுக்கம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் பற்றிய முடிவுகளை எம்மால் நேரகாலத்துடன் அறியலாம்.

✱ மழை பெய்வதற்கு முன்னர் இடி, மின்னல் மற்றும் இருள் சூழ்தல் இடம்பெறும். இவ்வேளைகளில் திறந்தவெளிகளிலும்


நிலநடுக்கம்


வெள்ளப்பெருக்கு

மைதானங்களிலும் நடந்து செல்லலாகாது. மின்சார உபகரணங்களைச் செயலிழக்கச் செய்ய வேண்டும். அத்துடன், உலோகம் சார்ந்த வேலைகளில் ஈடுபடாதிருத்தல்.

**1. சரிவான பிரதேசங்களில்;**

✱ தாவரப் போர்வையினை அகற்றாதிருத்தல்.

✱ தாவரப் போர்வையினை அதிகரித்தல்.

✱ கல் வேலிகள், சமவுயரி வடிகால்களை அமைத்தல்.

**2. கரையோரப் பிரதேசத்தில்;**

✱ பசுமை வலயங்களைத் தவிர்க்க வேண்டியது மிகவும் முக்கியமானது. கரையோரத்திலுள்ள பளிங்குப் பாறைகளைப் பாதுகாத்தல் வேண்டும்.

✱ கரையோரத்தைப் பாதுகாப்பதற்காக இடப்பட்டுள்ள கல்வேலிகளைப் பாதுகாத்தல்.

✱ கரையோரத்தில் உருவாகும் மணலின் வேகத்தைவிட அதிகமான வேகத்தில் மணல் அகற்றப்படாதிருத்தல்.

✱ கரையோரப் பகுதியில் ஒதுக்கு வலயத்தில் அத்துமீறிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளாதிருத்தல்.

✱ விலங்குகளின் நடத்தைப் போக்குகளை ஆராய்ந்து பார்த்து பாதுகாப்புக்கான முன்கூட்டிய உபாய முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய முன்கூட்டிய உபாய முறைகள் பற்றி விழிப்பூட்டப்பட வேண்டியதும் திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருக்க வேண்டியதும் மிக முக்கியமானதாகும்.

✱ வானிலை அறிவித்தலுக்கு இணங்க செயலாற்ற வேண்டியதும் மிக முக்கியமானதாகும்.

**கடந்த 15.07.2009 அன்று மத்திய சுற்றாடல் அதிகார சபை (சுற்றாடல் அமைச்சு) அனுசரணையில் 'விஜய்' பத்திரிகையுடன் வழங்கப்பட்ட, ஒரு சிலருக்குக் கிடைக்கப்பெறாத இலவச கையேட்டில் அடங்கியிருந்த அம்சங்களின் தொகுப்பு**

✱ பல நாட்களாக அடைமழை தொடருமாயின் தாவரப் போர்வையற்ற சரிவான பிரதேசங்களில் மண்சரிவுகள் இடம்பெறக்கூடுமென்பதால், அத்தகைய இடங்களிலிருந்து இடம்பெயர்தல்.

## திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்ளத் தயாராகும்போது.....

அனர்த்தத்திற்கு முன்னரும் அனர்த்தம் இடம்பெறுகின்ற வேளையிலும் அனர்த்தத்தின் பின்னரும் அனுபவம் வாய்ந்த தொண்டர் அமைப்புகளும் சுற்றாடல் அமைப்புகளும் முன்வந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சிறந்த தலைமைத்துவம் அளிக்கவேண்டும். அதன்படி,

✱ திட்டமிடல். ✱ ஒழுங்கு செய்தல்.

✱ இணைப்பாக்கம். ✱ தீர்மானம் மேற்கொள்ளல்.

✱ நடைமுறைப்படுத்தல்.

✱ கட்டுப்பாட்டிற்கிணங்க செயலாற்றுதல்.

✱ மதிப்பீடு செய்தல் போன்ற முகாமைத்துவக் கோட்டுபாடுகளைப் பயன்படுத்தி, செயலாற்ற வேண்டியது தலைமைத்துவத்தின் பொறுப்பாக அமையும்.

**தொடர்புகளுக்கு:**
**சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**தொ.இல - 2872278.**


இடி, மின்னல் தாக்கம்


மண்சரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி வரும்

# வெண்மூட்டைப்பூச்சி





**அண்மைக்காலமாக வெண்மூட்டைப்பூச்சித் தொற்று பயிர்களை மிகவும் மோசமாகப் பாதித்து வருகின்றது. பல விவசாய நிலங்கள், வீட்டுத்தோட்டங்கள் என்பன இதனால் பாதிக்கப்பட்டுள்ளன**

### பூச்சித்தொற்று பற்றிய விபரம்

இது வண்டு இனத்தைச் சேர்ந்ததாகும். பெப்பொல் பிட்டி மக்குணா என்று இதனை பொதுவாகக் குறிப்பிடுவர். இது பெரும்பாலும் பப்பாளிப் பழச் செய்கையை பாதிப்பதனால் Papaya mealy bag எனப் பெயர் பெறுகின்றது. ஹோமோப்டெரா (Homoptera) இனத்தைச் சேர்ந்த இந்த வண்டு சியுடோகொக்சிடே (Psudococcidae) பிரிவைச் சேர்ந்தது. வெண்மூட்டைப் பூச்சி pakacoccusmarginatus என்ற விஞ்ஞானப்பெயரினால் அழைக்கப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படும் பயிர்களின் ஊடாக இது நாட்டிற்குள் பரவியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

### உலகம் முழுவதும் பரவியமை

இந்த பூச்சி இனமானது, இன்று உலகம் முழுவதும் வியாபித்துள்ள தொற்றாக மாறியிருக்கின்றது. 1992 இல் முதன்முதலில் இந்த இனம் மெக்ஸிகோவில் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு பரவிய இந்தப் பூச்சியினம் இயற்கையாகவே கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. இதற்குரிய காரணம் பூச்சியின் எதிரிப் பூச்சிகள் அங்கு பரவலாகக் காணப்பட்டமை ஆகும். எனினும், பிற நாடுகளில் பரவிய இந்த பூச்சியினம் இயற்கையிலேயே கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை.

### இலங்கை முழுவதும் பரவியமை

இது கம்பஹா, கொழும்பு மாவட்டப் பகுதி எங்கும் பரவியுள்ளது. இந்தப் பூச்சிகளின் பரம்பல் பற்றி முதலில் கம்பஹா மாவட்டத்தின் களனி, கோணவல, கட்டான, ஆடிஅம்பலம, படல்கம மற்றும் கொழும்பு மாவட்டத்தின் பமுணுவ, மொரட்டுவ, தெஹிவளை, பன்னிப்பிட்டிய ஆகிய பகுதிகளில் ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது. தற்பொழுது கல்கிசை, களுத்துறை,ராகம,பஸ்யால,மாக்கந்துர, திவுலப்பிட்டிய, குளியாப்பிட்டிய, பூகொட ஆகிய பகுதிகளிலும் இந்தப் பூச்சித் தொற்று பரவியுள்ளது.

### பூச்சியின் இயல்புகள்

இந்த பூச்சி பயிர்களின் போஷாக்கை உறிஞ்சும் தன்மை கொண்டது. இதன் சீரம் மென்மையானது. பெண் பூச்சி நீள்வட்ட வடிவம் கொண்டது. சீரம் 2 முதல் 3 மில்லிமீற்றர் நீளம் கொண்டதாகும். இளம் மஞ்சள் நிறம் கொண்டது. சீரம் மெல்லிய மா போன்ற பொருளினால் சூழ்ந்திருக்கும். அது மெழுகு போன்ற பதார்த்தமாகும். இது மிகவும் மெதுவாகப் பயணிக்கும் தன்மை கொண்டது.

### பயிர்களில் பரவுதல்

இவை காற்றினாலும் தொற்றுக்குள்ளான பயிர்களில் இருந்தும் ஆரோக்கியமான பயிரினத்துக்குப் பரவுகின்றது. தொற்றுக்குள்ளான பயிர்களின் மேல் அமர்ந்து செல்லும் பறவையினங்கள் மற்றும் சிறிய உயிரினங்கள் ஊடாகவும் ஏனைய பயிர்களுக்கு இவை பரவக்கூடும். மனிதர்கள் மற்றும் வெப்பமான காலநிலைகளினாலும் இப்பூச்சித் தொற்று ஏற்படுகின்றது. இப்பூச்சித் தொற்று ஏற்பட்ட பயிர்களின் தாவரத்தின் பகுதிகளை எரித்து விடுதல் அல்லது குப்பை வண்டிகளில் போடுதல் என்பன இதைத் தடுப்பதற்கு ஏற்ற சிறந்த வழிமுறையாகும்.

### பூச்சியின் பாதிப்பை உணர்ந்து கொள்ளுதல்

பயிரின் பாகங்களில் மா போன்ற பொருள் படிந்திருக்கும் இதுவே முதல் அறிகுறியாகும். பஞ்சு போன்ற இந்த மா படலம் ஏனைய பகுதிகளுக்கும் பரவத் தொடங்குகின்றது. பின்னர் அந்த பாதிக்கப்பட்ட தாவரப் பகுதிகளில் மஞ்சள் நிறத்தில் பள்ளம் ஏற்படும். இதனால், பயிர்கள்










பாதிக்கப்படும். இவ் இனப்பூச்சிகள் பயிர்களின் ஈரப்பதனை உறிஞ்சும் போது விஷத்திரவத்தை தாவரங்களில் செலுத்துவதனால் இதன் வளர்ச்சி பாதிக்கப்படும்.இதனால்,விளைச்சல், அறுவடை என்பன பாதிக்கப்படும். இறுதியில் பயிர்கள் முடங்கிப்போகும் நிலை ஏற்படும்.

### அச்சுறுத்தல் நிலை

பயிர்ச்செய்கையின்போது பலதரப்பட்ட கிருமிநாசினிகள் பயன்படுத்தப்படுவதனால் எமக்கு நன்மை பயக்கும் பூச்சி மற்றும் வண்டு இனங்களும் அழிந்து விடுகின்றன. வெண்மூட்டைப்பூச்சி இதற்கு முன்னர் பல்வேறு இடங்களில் பரவியிருந்தது. இன்று அது ஒரு தொகையாகப் பெருகி விட்டது. நன்மை பயக்கும் பூச்சியினங்கள் சூழலிலிருந்து விடைபெற்று விட்டதால் இவ்வாறான அழிவு தரும் பூச்சியினங்கள் பெருகி விடுகின்றன.



அத்துடன், இறப்பர் போன்ற வருவாய் ஈட்டும் பயிர்கள் இதனால் பாதிப்பை எதிர்நோக்குவது பெரும் பொருளாதார நட்டமாகும்.

### பாதிப்பை எதிர்நோக்கும் பயிர்கள்

பப்பாளி செய்கை பெரும் பாதிப்பை எதிர்நோக்குவதுடன், மஞ்சள் கிழங்கு, அரலி, ஈரப்பலாக் காய், ஜப்பான் அலறி ஆகிய தாவரங்களை இது பெரிதும் பாதிக்கின்றது. கத்தரி, தக்காளி, மிளகாய், வெண்டி ஆகிய காய்கறிகள் மற்றும் மாம்பழம், வாழை, மாதுளம், அம்பரல்லா பழ வகைகள், பலா என்பனவற்றுடன் 60இற்கும் மேற்பட்ட தாவரங்களையும் இது பாதிக்கின்றது.

### பூச்சியைக் கட்டுப்படுத்த முடியுமா?

மெழுகு போன்ற திரவத்தினால் இது மூடப்பட்டுள்ளதால் இதை இலகுவில் கட்டுப்படுத்த முடியாது. எனினும், மழை அதிகமாக உள்ள ஈரலிப்பான காலநிலையின் போது பூச்சிகளின் பெருக்கம் கட்டுப்பட்டுள்ளது. எனினும், உலர் காலநிலையின்போது பூச்சிகளின் தொல்லை மீண்டும் அதிகரிக்க ஆரம்பிக்கின்றது.

### தற்போதைய நிலைமை

தற்பொழுது பல்வேறு முறைகளில் 40 வீதமான பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், முழுமையாக இலங்கையில் இப்பூச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வெண்மூட்டைப்பூச்சியின் தாயகமான மெக்ஸிக்கோவில் இந்த பூச்சியின் எதிரிப்பூச்சியினங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக ஐந்து பூச்சியினங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தற்போது இப்பூச்சியினால் பெரும் பிரச்சினையை சந்தித்துள்ள அமெரிக்கா இந்த ஐந்து எதிரிப் பூச்சியினங்களையும் பெருக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கையில் கிறீன்லேஸ்விங்ஸ் (Greenlasewings) என்ற பூச்சியும் இன்னொரு வண்டு இனமும் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### நீங்களும் இந்த முறையினைப் பின்பற்றுங்கள்

**✱ உங்கள் வீட்டுத்தோட்டத்தில் இந்த பூச்சி காணப்படும் பயிர்களை அடிக்கடி பரிசீலித்துப் பாருங்கள். பப்பாளி, மஞ்சள் கிழங்கு, அரலிய போன்ற தாவரங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.**

**✱ பாதிக்கப்பட்டுள்ள பயிர்களை தோட்டத்தில் உடனடியாக இனம் காணுங்கள். அதிக பாதிப்புக்குள்ளான பயிர்களை வெட்டி அகற்றி விடுங்கள்.**

**✱ பூச்சிப் பாதிப்புக்குள்ளான தாவரங்களின் இலைகளை சேகரித்து எரியூட்டுங்கள்.**

**✱ ஓரளவு பாதிப்புக்குள்ளான பயிர்களின் மீது வேகமாக நீரைப் பாய்ச்சுங்கள்.அடிக்கடி இவ்வாறான பயிர்களை ஈரலிப்பாக வைத்திருங்கள்.**

**✱ குரோட்டன் செடிகளில் இந்த பூச்சித்தொற்று ஏற்படின் சவர்க்காரத்தூள் 2 தேக்கரண்டி மண்ணெண்ணெய் 1 தேக்கரண்டி என்பனவற்றை ஒரு லீற்றர் நீரில் கலந்து அந்த மரங்களில் விசுறுங்கள்.**

**✱ வீட்டுத்தோட்ட செடிகள் பாதிக்கப்பட்டிருப்பின் செல்லப் பிராணிகளை குளிப்பாட்டப் பயன்படுத்தும் ஷாம்பூக்களை நீரில் கலந்து தெளிக்கவும்.**

**✱ பாதிக்கப்பட்ட தாவரத்தின் மீது கம் டேப், கிரிஸ் பூசப்பட்ட பொலித்தீன் பட்டி என்பனவற்றை இடுவதன் மூலம் பூச்சிப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிர்கிஸ்தான்

தேசிய கொடி

பிஷ்கேக் நகரின் ஒரு பகுதி



**அரசு:** ஜனாதிபதிக் குடியரசு.
**தேசிய பெயர்:** கிர்கிஸ் ரிபப்ளிகாசி.
**அமைவிடம்: கிழக்கு**-சீனா, **மேற்கு**-கஸகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் **வடக்கு**-கஸகஸ்தான், **தெற்கு**-தஜிகிஸ்தான் என்பன எல்லைகளாக அமைந்துள்ளன.
**ஜனாதிபதி:** குர்மான்பெக் பகியேவ்.
**பிரதமர்:** இகோர் சுடிநோவ்.
**சுதந்திரம்: சோவியத் யூனியனிடம் இருந்து:** சோவியத் கூட்டுக்குடியரசு: 5 டிசம்பர் 1936, சுதந்திரப் பிரகடனம்: 31 ஓகஸ்ட் 1991, நிறைவு: 25 டிசம்பர் 1991.
**தேசிய விடுமுறை தினம்:** ஓகஸ்ட் 31.
**மொத்த நிலப்பரப்பு:** 73861 ச.மைல் (191,300 ச.கி.மீற்றர்).
**சனத்தொகை** (2009): 5,431,747
**தலைநகரமும் மிகப்பெரிய நகரமும்:** பிஷ்கேக்
**ஏனைய பெரிய நகரம்:** ஓஷ்
**நாணயம்:** சோம்
**சமயம்:** இஸ்லாம் 75%, ரஷ்யன் ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவம்-20%, ஏனையவை 5%.
**எழுத்தறிவு வீதம்:** 98.7%
**மொழி:** கிர்கிஸ்-(அரசகரும மொழி),ரஷ்யன் -(உத்தியோகபூர்வ மொழி).
**இனங்கள்:** கிர்கிஸ் - 68.9%, உஸ்பெக்-14.4%, ரஷ்யன் - 9.1%, ஏனையோர் - 7.6%.
**இணையத்தளக் குறியீடு:** .kg
**சர்வதேச தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +996
**தேசிய சின்னங்கள்:** மலர்-டியுலிப் (மரம், விளையாட்டு, பறவை, மிருகம் என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை).




தேசிய இலச்சினை

## தேசிய கீதம்

Ak monguluu aska zoolor, talaalar,
Elibizdin jany menen barabar.
Sansyz kylym Ala-Toosun mekendep,
Saktap keldi bizdin ata-babalar.....என
ஆரம்பமாகின்றது.

## புவியியல்

இது கரடுமுரடான மலைப்பாங்கான தரைத்தோற்றத்தைக் கொண்டது. 'டியன்ஷான்' மலைத்தொடரானது நாட்டின் முழு நிலப்பகுதியில் 95% பகுதியில் பரந்து காணப்படுகின்றது. மேலும், அலாய், கிர்கிஸ் மற்றும் டியன்ஷான் மலைகளும் அதனுடன் தொடர்புடைய பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. மலைகளிலிருந்து பல நதிகளும் பாய்கின்றன. அல்-சாய், ச்சு, காரா டார்யா, நரின் என்பன அவற்றில் பிரதானமானவை.

இங்குள்ள இஸ்ஸிக்-குல் ஏரியானது உலகின் இரண்டாவது பெரியஏரியாகும். மிகச்சிறிய பகுதிகளில் மாத்திரமே சமமான தாழ் சமவெளிகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 24,406 அடி உயரமான 'ஜெங்கிஷ் சொகுசு' நாட்டின் உயரமான மலைச்சிகரமாகும். நாடு 7 மாகாணங்களாகவும் ஒரு நகரமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

## வரலாறு

கிர்கிஸ்தானின் 'டியன்ஷான்' மலைப்பிரதேசங்களில் முதன்முதலாக துருக்கியர்களே குடியேறினர். அவர்கள் மேய்ச்சல் நிலங்களை நாடிச்செல்லும் நாடோடிகளாகவே வாழ்ந்தனர். 1900 ஆண்டுகளில் ரஷ்யா தனது நிலப்பரப்பை விரிவுபடுத்தும்பொழுது இப்பிரதேசத்தை விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தியது. பின்னர் 1924 இல் சோவியத் குடியரசால் சுயாட்சியுள்ள குடியரசாக்கப்பட்டது. 1936 இல் சோவியத் சமவுடமை குடியரசுடன் இணைக்கப்பட்டது.



ஜனாதிபதி



பிரதமர்

புராணா கோபுரம்



## காலநிலை

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உலர் காலநிலையும் குளிர் காலநிலையும் நிலவுகின்றன. மேற்கு மலைப்பள்ளத்தாக்குகளிலும் கிழக்குச் சரிவுகளிலும் சிறிதளவு மழைவீழ்ச்சி காண்ப்படுகின்றது.

## கலாசாரம்

கலப்பு இனக்குழுக்களையும் அதற்குரித்தான கலாசாரங்களையும் கொண்ட நாடாகும். இதில் கிர்கிஸ் இனக்குழு பெரும்பான்மை இனமாக இருக்கின்றது. கிர்கிஸ் இனக்குழுவில் 40 குலப்பிரிவுகள் காணப்படுகின்றன. அதனை குறிக்கும் முகமாகவே கிர்கிஸ் தேசிய கொடியின் நடுவில் 40 மஞ்சள் நிற சூரியக்கதிர்கள் காணப்படுகின்றன.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 7%): புகையிலை, பருத்தி, கிழங்கு வகைகள், காய்கறிகள், திராட்சைப்பழம் உட்பட ஏனைய பழவகைகள், செம்மறி ஆடு, ஆடுகள், மாடுகள், செம்மறியாட்டு ரோமம்.
**தொழிலாளர்** (2000): 2.7 மில்லியன். (விவசாயத்துறை 55%, கைத்தொழில்துறை 15%, சேவைகள் 30%).
**வேலையற்றோர்** (2004): 18%
**கைத்தொழில்கள்:** சிறிய இயந்திரங்கள், புடவைக் கைத்தொழில், உணவுப் பொருட்கள், சீமெந்து, பாதணிகள், தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டிகள், மின்னியல் மோட்டார்கள், தங்கம், அரும்புவி உலோகங்கள்.
**இயற்கை வளங்கள்:** ஏராளமான ஹைட்ரோபவர், தங்கம் மற்றும் உலோகங்கள், நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு, துத்தநாகம், ஈயம், காரீயம், பாதரசம் என்பன.
**ஏற்றுமதிகள்:** பருத்தி, கம்பளி, மாமிசம், புகையிலை, தங்கம், பாதரசம், யுரேனியம், இயற்கை வாயு, ஹைட்ரோபவர், இயந்திரங்கள், பாதணிகள்.
**இறக்குமதிகள்:** எண்ணெயும் வாயுவும், இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், ரசாயனப் பொருட்கள், உணவுப் பொருட்கள்.




**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ரஷ்யா, சீனா, கஸகஸ்தான், சுவிற்சர்லாந்து, துருக்கி (2004).

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் - 351,000 (1997).
**வானொலி நிலையங்கள்:** AM 12, FM 14, SW 2.
**இணையத்தளப் பாவனையாளர்கள்:** 51,600 (2001).

## போக்குவரத்து

**புகையிரதப்பாதை:** 420 கி.மீ (2002),
**பெருந்தெருக்கள்:** 18,500 கி.மீ,
**நீர்வழிப்போக்குவரத்து:** 600 கி.மீ, (1990),
**துறைகளும் துறைமுகங்களும்:** பாலிக்சி,
**விமான நிலையங்கள்:** 68 (2002).

## பிரசித்திபெற்ற இடங்கள் சில....

* **அக்-பெஷிம்** - புராதனகால ஆதாரங்களுடன்கூடிய புராதன நகரம் * **அலா-ஆர்ச்சா கணவாய்** - அலா-ஆர்ச்சா இயற்கைவனத்தின் மத்தியில் அமைந்துள்ளது * **பிஷ்கேக் நகரம்** - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளது * **வரலாற்று நூதனசாலை** - பிஷ்கேக் * **ஓஷ் பஸார்** - கிர்கிஸ்தானின் மிகப் பெரிய சந்தை * **புராணா கோபுரம்** - டொக்மாக் * **சோல்பன்-அடா** (நீர்வீழ்ச்சிகள், காடுகள், ஏரிகளை இங்கு காணலாம்) * **கராகொல்** - அப்பிள் தோட்டங்கள், ஞாயிறு சந்தை என்பனவற்றுக்கு உலகளவில் பிரசித்தி பெற்ற நகரம்.



ஓஷ் பஸார்



இஸ்ஸிக்-குல் ஏரி



அலா-ஆர்ச்சா கணவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## (வினாத்தாள் II )

பெயர்: .................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. பின்வரும் துண்டுப் பிரசுரத்தை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> *பொது மக்களே!*
>
> **டெங்குக் காய்ச்சலைத் தவிர்த்துக்கொள்வோம்!**
>
> நுளம்புகள் பெருகாமல் தடுக்க நீங்கள் செய்யவேண்டியவை;
> - வெற்றுத் தகர டப்பாக்களில் நீர் தேங்கி நிற்க விடாதீர்கள்.
> - இளநீர் கோம்பைகள், தேங்காய்ச் சிரட்டைகள் ஆகியனவற்றில் நீர் தேங்கி நிற்க விடாதீர்கள்.
> - பூச்சாடிகளின் கீழ் வைக்கப்படும் நீர்ச்சட்டிகளில் உள்ள நீரை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை அகற்றுங்கள்.
> - கூரைகளில் நீர் வழிந்தோடும் குழாய்களில் நீர் தேங்கி நிற்க விடாதீர்கள்.
> - குப்பைகளை அகற்றுங்கள் அல்லது குழி தோண்டிப் புதையுங்கள்.
> - வீட்டையும் வீட்டுச் சூழலையும் தூய்மையாக வைத்திருப்போம். டெங்கு நுளம்புகளை ஒழிப்போம்.
>
> *-சுகாதாரக் கல்விப் பகுதி.*
> *கொழும்பு மாநகர சபை.*

(1) எவ்வாறான இடங்களில் நீர் தேங்கி நிற்கின்றது?

............................................................

(2) நீர்ச்சட்டிகளில் உள்ள நீரை எத்தனை நாட்களுக்கு ஒருமுறை அகற்ற வேண்டும்?

............................................................

(3) எவற்றைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும்?

............................................................

(4) 'பூச்சாடி' என்பதைப் பிரித்து எழுதுக.

............................................................

(5) 'தூய்மை' என்பதற்கு ஒத்தகருத்துச் சொல் தருக.

............................................................

(6) எவற்றை நாம் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்?

............................................................

02. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(1) புத்தகங்கள்தானே/வழங்கப்படும்/அலட்சியப்படுத்தாதீர்கள்/என/இலவசமாக

............................................................

(2) அமைதியாக/கொண்டிருந்தது/ஓடிக்/கங்கை/மாணிக்க

............................................................

03. பின்வரும் மரபுத் தொடரின் உட்கருத்தை எழுதுக.

(1) நெஞ்சு புண்ணாதல்: ............................................

(2) கை கூடுதல்: ............................................

04. பின்வரும் பழமொழிகளின் கருத்துக்களை எழுதுக.

(1) ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. - ..................................

(2) குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது. - ..................................

05. பின்வரும் தொடர்மொழிகளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக.

(1) மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லாதவன். - ..................................

(2) எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா. - ..................................

06. பின்வரும் உவமைத் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்துக்களை எழுதுக.

(1) பூனையும் எலியும் போல - ..................................

(2) கிணற்றுத் தவளை போல - ..................................

07. சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.

(1) இ.ஒ.கூ. - ..................................

(2) இ.போ.ச - ..................................

08. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை எழுதுக.



(1)This is my..................................

(2) 'விலங்குகள்' என்பதன் ஆங்கிலப் பதத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

............................................................

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

நான் தண்ணீர் குடிக்கின்றேன் - ..................................

10. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

I will come tomorrow - ..................................

11. இதன் கருத்தைத் தமிழில் எழுதுக.

ஒயா(G)கே பாசலே நம மொகக்த? ..................................

12. 'நூலகம்' எனும் சொல்லின் சிங்களப் பதத்தைத் தமிழில் எழுதுக.

............................................................

* 13 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

13. பின்வரும் தாவர இலைகளில் மூன்று ஒத்த வடிவத்தை உடையன. வேறுபட்ட வடிவத்தை உடைய தாவர இலை எது?

(1) புளி (2) நிழல் வாகை (3) குறிஞ்சா (4) அகத்தி

14. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

(1) வேம்பு (2) இலுப்பை (3) றப்பர் (4) பாலை

15. தாவரங்களின் வேர்களை அரிக்கும் பிராணி எது?

(1) நத்தை (2) மயிர்கொட்டி (3) தேவாங்கு (4) கறையான்


16. தவளை முட்டையின் நிறம் யாது?

(1) கறுப்பு (2) மஞ்சள் (3) வெள்ளை (4) நீலம்

17. டெங்கு நுளம்பு தாக்குவது நாளொன்றின் எந்த நேரத்திலாகும்?

(1) இரவு (2) அதிகாலை (3) நண்பகல் (4) மாலை

18. இவ்வுருவில் உள்ள தாவரம்;



(1) கற்பூரவள்ளி
(2) முள்முருக்கு
(3) சதைகரைச்சான்
(4) குப்பைமேனி

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**


### வினாத்தாள் I இன் விடைகள்

*(ஜூலை 15, 22 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | |
|---|---|---|---|
| (01) 2 | (02) 2 | (03) 3 | (04) 2 |
| (05) 2 | (06) 2 | (07) 3 | (08) 1 |
| (09) 3 | (10) 2 | (11) 3 | (12) 2 |
| (13) 3 | (14) 1 | (15) 3 | (16) 1 |
| (17) 2 | (18) 2 | (19) 3 | (20) 2 |
| (21) 2 | (22) 3 | (23) 2 | (24) 3 |
| (25) 2 | (26) 3 | (27) 1 | (28) 2 |
| (29) 3 | (30) 3 | (31) 3 | (32) 2 |
| (33) 1 | (34) 3 | (35) 2 | (36) 3 |
| (37) 2 | | (38) ரூபாய் 40.00 | |
| (39) ரூபாய் 45.00 | | (40) ரூபாய் 60.00 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலைய



**பண்டைய காலத்தில் மனிதன் சூழலின் ஒரு பங்காளனாகவே வாழ்ந்தான். சூழலுக்கேற்பவே தனது வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டான். அதனால், சிறிய காலநிலை மாற்றம்கூட தெளிவாக அவனுக்குத் தெரிந்தது. இயற்கை அழிவுகள் குறித்தும் அவனால் எதிர்வுகூறக்கூடியதாக இருந்தது. ஆனால், காலம் செல்லச் செல்ல மனிதனால் உலகை வெல்லக்கூடியதாக இருந்தாலும் இயற்கையுடன் அவன் கொண்டிருந்த பிணைப்பைத் தொடர்ச்சியாக கொண்டு செல்ல முடியாமல் போனது. இதேவேளை, உலகை வெல்லும் நோக்கிலான மனிதனின் செயற்பாடுகளினால் சூழலுக்கு பல்வேறு தாக்கங்கள் ஏற்படத் தொடங்கின. இவை இயற்கை சமநிலையை சீர்குலைத்து சீரான காலநிலையில் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியது. இதனால், மனிதன் பல அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியநிலை ஏற்பட்டது.**

இவ்வாறான நிலைமைகளில் மனிதன் காலநிலை அவதானிப்புகளின்றி பெரிதும் சிரமப்பட்டான். இதனையடுத்து, 1600 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவின் 6 இடங்களை இணைத்து காலநிலையை அளவீடு செய்யவும் எதிர்வுகூறல்களை வெளிப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவைவெற்றி பெறவில்லை. எனினும், காலநிலை குறித்து தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் பெறுபேறாக 1853 ஆம் ஆண்டு காலநிலை தொடர்பாக சர்வதேச மாநாடொன்றை ஏற்பாடு செய்யக்கூடியதாக இருந்தது.

வெயில், மழை, சூறாவளி, வறட்சி என்பன இயற்கையின் விளைவுகளாகும். இவை குறித்து முன்கூட்டியே அறிந்துகொள்ள எம்மால் முடியாது. எனினும், இவை பற்றிய சிற்சில தரவுகளையும் அதன் பாதிப்புகளையும் தெரிந்துகொள்ள முடியும். இதனால், ஏற்பட இருக்கும் இயற்கை அனர்த்தத்தைத் தடுப்பதற்கு முன்கூட்டிய ஆயத்தங்களை ஓரளவுக்கேனும் மேற்கொள்ள முடியும். இதற்கு எமக்குப் பெரிதும் உதவுவது வளிமண்டலவியல் திணைக்களமாகும்.

## உலக வளிமண்டலவியல் அமைப்பு

உலக நாடுகள் பல ஒன்றிணைந்து, 1873 இல் சர்வதேச வளிமண்டலவியல் அமைப்பை (IMO) உருவாக்கியது. அதன் தலைமையகம் ஒஸ்ட்ரியா நாட்டின் தலைநகரான வியன்னா நகரில் அமைக்கப்பட்டது. பின்னர் 1950 இல் சர்வதேச வளிமண்டலவியல் அமைப்பும் (IMO) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்தித் திட்டமும் (UNDP) ஒன்றிணைந்து உலக வளிமண்டலவியல் அமைப்பை (World Meteorological Organization-WMO)உருவாக்கியது. இதன் தலைமையகம் சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது. இலங்கை உள்ளிட்ட 117 நாடுகள் இங்கு உறுப்புரிமையைப் பெற்றுள்ளன. தற்பொழுது இதன் பணிப்பாளராக மைக்கல் ஜெராவுட் திகழ்கின்றார். இதில் புவி மண்டலம், கடல், நிலம், வான் ஆகியவை குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள வெவ்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக விமானப் பயண வலயம் மற்றும் எல்னினோ படை குறித்தும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வெவ்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.





உலக வளிமண்டலவியல் அமைப்பின் தலைமையகம்

## கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களம்

1907 இல் இது ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் காலநிலை மதிப்பீடு, நிலநடுக்க அவதானிப்பு நேரத்தை வழங்கல் மற்றும் ரேடார் முறை,வானொலி அலை அவதானிப்பு போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது 1948 இல் அரச திணைக்களமானது. 1951 இல் உலக வளிமண்டலவியல் அமைப்பின் அங்கத்துவமும் கிடைத்தது. இன்றளவில் வினைத்திறன் மிகுந்த ரேடார் அவதானிப்பு முறை இங்குள்ளது. அத்துடன், சர்வதேச தொடர்புகளினூடாகக் கிடைக்கும் தரவுகளை உடனடியாகப் பெற்றுக்கொடுக்கும் ஆசியாவின் பிரதான மத்திய நிலையமாகவும் இது திகழ்கின்றது.

## இலங்கையில் வளிமண்டலவியல் திணைக்களம்

இலங்கையில் காலநிலை குறித்த ஆராய்ச்சிகள் 1867-1883 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில்தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிலஅளவையாளரான கோர்ணல் ஃபயரஸ் என்பவரே இதனை மேற்கொண்டுள்ளார்.



பழைய கட்டடம்



புதிய கட்டடம்

**செயற்பாடுகள்:**

- நாட்டிலும் அதனைச் சூழவுள்ள கடற்பிரதேசங்களிலும் நிலவும் காலநிலையை அவதானித்தல்.
- காலநிலை தரவுகளை உலகிற்கு அறிவித்தல்.
- தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
- தரவுகளைப் பராமரித்தல்.
- ஊடகங்களினூடாக மக்களுக்கும் விமானப் பயணங்களுக்கும் கடல் பயணங்களுக்கும் வானிலை எதிர்வுகூறலைப் பெற்றுக்கொடுத்தல்.
- வானவியலுடன் தொடர்புடைய சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சூரியோதயம், சூரியன் மறைவு, சந்திரோதயம், சந்திரன் மறைவு, நேரக்கணிப்பீடு என்பனவற்றை மேற்கொள்ளல்.




உலக வளிமண்டலவியல் அமைப்பின் இலச்சினை



மைக்கல் ஜெராவுட்

## காலநிலைத் தரவுகள்

இயற்கைச் சூழலில் ஏற்படும் காலநிலை மாற்றங்களுக்கு பிரதான காரணமாக அமைவது புவியின் மேற்பரப்பிலும் வளிமண்டலத்திலும் ஏற்படும் பல்வேறு மாற்றங்களே ஆகும்.

இந்த மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு முதலில் புவி மேற்பரப்பிலும் வளிமண்டலத்தினுள்ளும் நிலவுகின்ற-மாற்றமடைகின்ற காலநிலைத் தரவுகள் எவை என்பதை ஆராயவேண்டும். புவியின் மேற்பரப்பிலிருந்து மூன்று வழிகளில் காலநிலைத் தரவுகள் பெறப்படுகின்றன.




சீனாவில் அமைந்துள்ள காலநிலை மத்திய... மூலம் தரவுகள் பெறப்படுகின்ற...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ய ஆராயும் இடம்

**1. நிலத்தின் மேற்பரப்பிலிருந்து பெறப்படும் காலநிலைத் தரவுகள்**

* வெப்பநிலை
* ஈரப்பதன்
* காற்றின் வேகமும் திசையும்
* மேகங்களின் வகைகளும் உயரமும்
* வளிமண்டல அழுத்தம்
* மழைவீழ்ச்சி
* தெளிவுத்தன்மை
* சூரிய வெளிச்சமும் ஆவியாதலும்



**2. கடலின் மேற்பரப்பிலிருந்து பெறப்படும் தரவுகள்**


* கடல் நீர்மட்ட வெப்பம்
* கடலலைகள் பயணிக்கும் திசையும் உயரமும்
* கடலின் இயல்பு

**3. மேல் வளிமண்டலத்திலிருந்து பெறப்படும் தரவுகள்**

* தரைமட்டத்தில் இருந்து ஒவ்வொரு உயரமட்டத்திலும் வளியின் வெப்பம்
* ஈரப்பதன்
* அழுத்தம்
* காற்றின் வேகமும் திசையும்

## தரவுகளைப் பெறுவதும் வெளியிடுதலும்

மேற்குறித்த தரவுகளைப் பெற விசேடமாக அமைக்கப்பட்டுள்ள காலநிலை அளவீட்டு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன்மூலம் உரிய நேரத்தில் உலகின் சகல இடங்களிலும் அமைந்துள்ள காலநிலை மத்திய நிலையங்கள் மற்றும் கடலில் பயணிக்கும் விசேட கப்பல்கள் மற்றும் முகில்களின் அளவு-வகை- முகில்களின் உயரம்-தெளிவு, வெப்பம், வளிமண்டல அழுத்தம், மழைவீழ்ச்சி எனும் சகல தரவுகளும் 3 மணி நேரத்திற்கொரு முறை பெறப்படுகின்றது.




இதன்மூலம் பெறப்படும் காலநிலைத் தரவுகள் மற்றும் தகவல்கள் வலைப் பின்னல் ஊடாக உலகம் பூராவும் வெளிப்படுத்தப்படுகின்றது. இத்தரவுகளை ஒன்றிணைத்து, பகுப்பாய்வு செய்த பின் காலநிலை மாற்றங்கள் குறித்து ஆலோசனைகளைபெற்றுக் கொள்ள முடியும். இச்செயற்பாடுகளையடுத்து காலநிலை எதிர்வுகூறல் வெளிப்படுத்தப்படுகின்றது.

## காலநிலை அளவீட்டு உபகரணங்கள்

ஆரம்பகாலத்தில் மனிதன் கடலுக்கருகில் இருந்தவாறே வானிலை அவதானிப்புகளை மேற்கொண்டான். பிரமிட்டுகளை நிர்மாணிக்கும்பொழுதுகூட காற்றின் வேகத்தைப் பயன்படுத்தியதாக வரலாறு கூறுகின்றது. அதன்பின், 1607 இல் கலிலியோ கலிலியால் வெப்பமானியும் 1643 இல் டொரிசெல்லியால் ரிச்டரும் கண்டறியப்பட்டு, அழுத்தமானி உருவாக்கப்பட்டது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு காலநிலையை அளப்பதற்கான உபகரணங்களை உருவாக்கும் பணி 19 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமானது.

## வளிமண்டலவியல் தகவல்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன?

**விமானப் பயணம்:**

விமானப் பயணங்களைப் பொறுத்தவரை வளிமண்டலவியல் தகவல்கள் முக்கியத்துவமானதாகும். விமானமொன்று வானில் உயரவும் தரையிறங்கவும் காலநிலை சாதகமே அடிப்படையாக அமைகின்றது. காற்றின் வேகம், வீசும் திசை, வெப்பம், அழுத்தம் என்பன இங்கு முக்கிய பங்காற்றுகின்றன.



**மீன்பிடி மற்றும் கடல் பயணங்கள்:**

சீரற்ற வானிலை நிலைமைகளினால் கடலில் சூறாவளி அல்லது கடுங்காற்று போன்றன ஏற்படலாம். இதன்போது, அலைகள் மற்றும் காற்று வீசும் திசை, அழுத்தம் என்பன மாறுபடலாம். இவை குறித்து ஆலோசனைகளையும் எச்சரிக்கைகளையும் பெற்றுக்கொள்ளலாம். கப்பல் பயணங்களுக்கும் இத்தகைய விபரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**பொதுமக்கள்:**

காலநிலை சீர்கேட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை நிறுத்த மனிதனால் முடியாது. எனினும், அது குறித்து முன்கூட்டியே அறிந்துகொண்டு, அதிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

காலநிலையின் ஓர் அங்கமே வானிலையாகும். வானிலை என்பது ஒரு குறுகிய காலப்பகுதியில் வானில் நிலவும் வானிலை மாற்றங்களைக் குறிக்கும். நீண்ட காலமாக வானிலை மாற்றங்களை அவதானித்து, மேற்கொள்ளும் முடிவுகளை 'காலநிலை' என அழைப்போம்.

-இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை தடையில்லை



அன்றைய நாள் சந்தோஷமான பொழுதாக இருந்தது. ரமேஷ் தொழில் புரியும் நிறுவனத்தில் அவனுக்கு பதவி உயர்வு கிடைத்திருந்தது. அவனுடைய தந்தை இருந்தால் மேலும் சந்தோஷமாக இருந்திருக்கும். அவர் கல்லுடைக்கும் ஏழைத் தொழிலாளி. தந்தையின் நினைவு வந்ததும் அவனுக்கு கடந்த கால நினைவுகள் மனக்கண்ணில் தோன்றின.

அன்று நானும் எனது தங்கையும் பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாகியபோது தங்கை அம்மாவிடம் காலை உணவு கேட்டாள். பதிலாக அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக வழிந்தோடியது. இதனைப் பார்த்த அப்பா எங்கள் தலைகளை வருடியபடி, "இன்று பாடசாலை சென்று வாருங்கள். நீங்கள் வரும் போது வீட்டில் சாப்பாடு தயாராக இருக்கும்" என்று வேதனையுடனும் பாசத்துடனும் கூறி விட்டு கல்லுடைக்கச் சென்று விட்டார்.

நாங்கள் ஓட்டமும் நடையுமாக பாடசாலைக்கு புறப்பட்டுச் செல்லலானோம், நான் எனது வகுப்பில் சென்று அமர்ந்தேன். தமிழ் ஆசிரியர் வந்து தமிழ் கொப்பியை எடுக்குமாறு கூற சக மாணவர்கள் கொப்பியை எடுத்தார்கள். எனக்கு கொப்பி இல்லை என்றபடியால் நான் விழித்துக் கொண்டிருந்தேன். இதனை அவதானித்த ஆசிரியர் என்னை அழைத்து, மாணவர்கள் மத்தியில் திட்டி அவமானப்படுத்தினார். தமிழ் கொப்பியை எடுத்துக்கொண்டு நாளை வருமாறும் கூறினார். என்னால் கொப்பியை வாங்கவும் முடியாது பாடசாலைக்கு வராமல் நிற்கவும் முடியாது. செய்வதறியாது ஆசிரியருக்குத் தெரியாமல் அவர் கற்றுக் கொடுப்பதை வகுப்பிற்கு வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்தேன். ஒரு வேளை சாப்பாட்டிற்கே கஷ்டப்படும் எனது குடும்பத்தினரிடம் இங்கு நடந்தவற்றைக் கூறமுடியுமா? என்னை நானே தேற்றிக்கொண்டு வீட்டிற்கு சென்றபோது, என் தலையில் இடி விழுந்தால் போல் ஒரு செய்தி. ஆம்! என் அன்புத் தந்தை கல்லுடைக்கும் இடத்தில் விழுந்து தலையில் பலமாக அடிபட்டு இறந்து போய்விட்டார்.

அம்மா கதறிக் கதறி அழுது கொண்டிருந்தார். நானும் துயரத்தை அடக்க முடியாமல் என்னையும் அறியாமல் கதறி அழுதேன். காலம் கடந்தது. நான் என் குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்று சிந்தித்து அன்றிலிருந்து, பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வியை நன்கு கற்கலானேன். வீட்டுக்கு சென்றதும் அம்மா சில தின்பண்டங்களை செய்து தருவார். நானும் தங்கையும் வீடு வீடாகச் சென்று விற்று பணத்தை அம்மாவிடம் கொண்டு வந்து கொடுப்போம். இப்படியே காலங்கள் உருண்டோடின. நான் கல்வியில் மிகச் சிறப்பாக முன்னேறினேன். என் திறமைக்கேற்ற நல்லதொழிலும் கிடைத்தது. என் குடும்பம் வறுமை நீங்கி நல்ல வருமானத்தைப் பெற்று ஓரளவு நல்ல நிலைக்கு வந்தது.

இப்பொழுது அம்மாவும் தங்கையும் சந்தோஷமாக இருக்கின்றனர். "அண்ணா! அண்ணா!" என்ற தங்கையின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தவனாக தங்கையை நோக்கி நடக்கின்றான் ரமேஸ்.

ஏ. என். ரிஸ்மியா,
தரம் - 11, ப/போகஹகம்புற மு.வித்.,

# அழகிய ரோஜாவே



இரவு வானத்தில்
ஒளிர்ந்த நட்சத்திரங்களை
முற்றத்தில் இறைத்தது - யார்?
ஓ....! ரோஜாச் செடியே
நீதானா?

எத்தனை அழகாய்
நித்தமும் நீ பூக்கின்றாய்.
உன்னை எத்தனையோ
பேர் விரும்புகின்றார்கள்.
நானும் சேர்ந்துதான்!

உனது ஒவ்வொரு இதழும்
மழலையின் உதடு போன்றது.
உன்னை தினமும் நான்
பார்த்துப் பார்த்து
மகிழ்ச்சியடைகின்றேன்.

வினோ துரைசிங்கம்,
இ/பாலர் இயேசு கன்னியர்மடம்,
இரத்தினபுரி.

# விடாமுயற்சி வெற்றி தரும்

முயற்சி என்பது ஒரு செயலைத் தீவிர வேகத்தோடு செய்தலாகும். விடாமுயற்சி என்பது அச்செயலை தொடர்ந்து தீவிர வேகத்தோடு செய்தலாகும். 'அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்னும் பழமொழிக்கு ஏற்ப எந்த ஒரு கடினமான காரியத்தைக் கூட தொடர்ந்தும் முயன்றும் செய்தால் நிச்சயமாக அதில் வெற்றி கிட்டும்.

எக்காரியத்தையும் செய்வதற்கு முன் எண்ணித்துணிய வேண்டும். பிறகு அக்காரியத்தைச் செய்யும் போது எவ்வகையான இடையூறுகள் வந்தாலும் அஞ்சாது எதிர்கொண்டு காரியத்தை ஆற்ற வேண்டும். மாணவர்களாகிய நாம் எமது



திறமைகளை வெளிக்காட்டக் கிடைக்கும் சந்தர்ப்பங்களான பரீட்சைகளை திறம்படச் செய்து, எமது விடாமுயற்சியை வெளிகாட்டுதல் வேண்டும்.

காலம் காலமாகப் போற்றப்படும் பெரியார்களும் விடாமுயற்சியினாலேயே வெற்றிகளைப் பெற்றவர்கள் என்பதை நாம் மறந்து விடலாகாது.

எஸ்.நிமலேஸ்வரன்,
எல்பொட, ம/மா கொத்மலை
விக்னேஸ்வரா ம.வித்.,
கட்டுக்கித்துளை.




# ஒற்றுமையே பலம்

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு-நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு' என்று பாரதியார் பாடியுள்ளார். மனிதன் தனித்து வாழமுடியாது. அவன் பல



தேவைகளுக்காக மற்றவர்களை சார்ந்துதான் வாழ வேண்டியுள்ளான். எனவே, மனிதன் குடும்பம், உறவு, நட்பு என்ற அன்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டே வாழ வேண்டியுள்ளது. எறும்பு, தேனீ போன்றவை ஒற்றுமையாக வாழ்வதைப் பார்க்கும்போது நாமும் ஒற்றுமையாக வாழ்வது எவ்வளவு இன்றியமையாதது என்பது எமக்குப் புரியும்.

'ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக்கெடும்'
'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்'
'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'
எனும் பழமொழிகள் ஒற்றுமையின் சிறப்பை உணர்த்துகின்றன. ஒற்றுமைக்காக நாம் ஓரளவு விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் வாழவேண்டும். காடுகளில் திரியும் மிருகங்கள் வானத்தில் பறக்கும் பறவைகள் எல்லாம் தம் இனத்துடன் கூட்டம் கூட்டமாக ஒற்றுமையாக வாழும்போது நாகரிகத்தின் உச்சக்கட்டத்தை அடைந்த மனித இனமாகிய நாம் ஏன் ஒற்றுமையாக வாழமுடியாது. நாமும் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

எஸ்.நிமலேஸ்வரன்,
தரம் - $9^B$,
விக்னேஸ்வரா ம.வித்.,
கட்டுக்கித்துளை.

# புலவரின் பதில்



ஏழை ஒருவர் புலவர் ஒருவரிடம் உதவி கேட்டுச் சென்றார். "எனது மகளுக்குத் திருமணம். அதனால், எனக்கு ஓர் ஆடும் ஒரு மூட்டை அரிசியும் கொடுத்து உதவ வேண்டும்" என்று கூறினார்.

அதற்குப் புலவர், "நீ கேட்டதில் ஒன்று நடக்கும்; இன்னொன்று நடக்காது" என்று பதில் கூறினார்.

அதைக் கேட்ட ஏழை மிகவும் மனம் வருந்தினார். "எப்படியும் நான் கேட்ட இரண்டையும் எனக்குத் தந்துதவுங்கள். இவ்வாறு செய்தால் தங்கள் உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன்" என்று கூறினார். ஏழையின் வாடிய முகத்தைக் கண்ட புலவர், "நான் என்ன சொல்லிவிட்டேன் என்று உன் முகம் வாடுகின்றது? நீ கேட்டதில் ஆடு நடக்கும். அரிசி நடக்காது. இதைத்தானே நான் சொன்னேன். நீ ஏன் வருந்தவேண்டும்?" என்றார்.

புலவரின் சொல் ஆற்றலைக் கண்டு அந்த ஏழை வியந்தான். புலவரும் அந்த ஏழை கேட்டதைக் கொடுத்தனுப்பினார்.

ச.நஸீமா,
தி/விபுலானந்தா கல்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அங்.இல : 2887
எம்.அஃபாப்,
தரம் - 4,
சாஹிரா தே.பாட.,
கம்பளை.


அங்.இல : 2888
அ.நெபெஸ், தரம் - 8,
உவர்மலை
விவேகானந்தா கல்.,
திருகோணமலை.


அங்.இல : 2889
என்.கஜேந்திரன்,
தரம் - 8,
பன்மூர் த.வித்.,
ஹட்டன்.


அங்.இல : 2890
எஸ்.ஹுஸ்னி,
தரம் - 6,
அக்/அ.ம.ம.வித்.,
அட்டாளைச்சேனை.


அங்.இல : 2891
ஆர்.கிருபாகரன்,
தரம் - 11[B],
நயாபான த.வித்.,
புசல்லாவ.


அங்.இல : 2892
எம்.திஷான்,
தரம் - 9,
மழ்ஹருஸ் ஸுழ்ஹியா
தே.பாட., காலி.


அங்.இல : 2893
எஸ்.நிரோஜ்குமார்,
உயர் தரம் (உயிரியல்),
சிவானந்தா தே.பாட.,
மட்டக்களப்பு.


அங்.இல : 2894
எம்.சாஜித்,
தரம் - 8[C],
அலிகார் தே.பாட.,
ஏறாவூர்-03.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 2895
ரா.சிவகலா,
தரம் - 11,
யா.வட.மத்.ம.கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல : 2896
செ.வசந்தினி,
தரம் - 11[A],
நானாட்டான் த.வித்.,
மன்னார்.


அங்.இல : 2897
எம்.அர்ஷாட்,
தரம் - 7[B],
குருகுத்தல மு.ம.வித்.,
கடுகண்ணாவை.


அங்.இல : 2898
ஜெனி,
தரம் - 8,
அப்புத்தளை த.ம.கல்.,
அப்புத்தளை.


அங்.இல : 2899
பு.மதிதரன்,
தரம் - 4,
வெஸ்லி உயர்தர பாட.,
கல்முனை.


அங்.இல : 2900
எம்.முஸ்ஸம்மில்,
தரம் - 1,
ரஹ்மானிய்யாஹ்
அ.கல்., அகுறனை-06.


அங்.இல : 2901
அ.வானதி,
தரம் - 8,
பளை றோ.க.த.க.பாட.,
பளை.


அங்.இல : 2902
யூடிற்றா கௌசிக்கா,
தரம் - 10,
யா/இ.கன்னியர்மடம்
ம.வித்., இளவாலை.


அங்.இல : 2903
ஏ.உதயமாலினி,
தரம் - 8,
விவேகானந்தா கல்.,
கொழும்பு-12.


அங்.இல : 2904
எஸ்.அருணாபிஷேக்,
தரம் - 7,
டீ.எஸ்.சேனாநாயக்க
கல்., பொரளை.


அங்.இல : 2905
ம.சுஜீதன்,
உயர் தரம்,
நயினாதீவு ம.வித்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல : 2906
க.சோமசுந்தரம்,
உயர் தரம்,
கொ.த.ம.வித்.,
பூனாகலை.

## வட, தென் அமெரிக்காவை இணைக்கும் கால்வாய்

பனாமா கால்வாய் 78 கிலோமீற்றர் நீளம் கொண்டது. இது பசுபிக் சமுத்திரத்தையும் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் அமெரிக்கக் கண்டங்களுடன் இணைக்கும் செயற்கைக் கால்வாய் ஆகும். இக்கால்வாய் அமைக்கப்படுவதற்கு முன்னர் கப்பல்கள் தென்அமெரிக்கக் கண்டத்தைச் சுற்றியே செல்ல வேண்டியிருந்தது. எனினும், இது வெட்டப்பட்டதை அடுத்து அந்நிலைமை மாறியது. நியூயோர்க்குக்கும் சென்.ஃபிரேன்ஸிக்கோவுக்கும் இடைப்பட்ட கடல்வழியில் சுமார் 8,000 மைல் தூரத்தை இந்தக் கால்வாய் குறைக்கிறது.

வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள ஒடுக்கமான நிலப்பரப்பின் குறுக்கே இக்கால்வாய் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 1880 இல் பிரான்ஸ் நாட்டின் தலைமையில் இக்கால்வாய் வெட்டும் பணி ஆரம்பமாகியது. எனினும், இம்முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. 1900 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா மீண்டும் இப்பணியைத் தொடங்கியது. இப்பணி பூர்த்தி செய்யப்பட்டு, 1914 இல் இக்கால்வாய் திறந்து வைக்கப்பட்டது.



## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 05.08.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்**
**குறுக்கெழுத்துப் போட்டி இல: 03**
**'விஜய்',**
**த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கி | ரு | 2 மி | ■ | 3 ஓ | ■ |
| ளி | ■ | ணா | ■ | 4 வீ | தை |
| ■ | ■ | சு | ■ | ய | ■ |
| ■ | 5 ப | ■ | 6 த | ம் | 7 பி |
| 8 உ | ண | வு | ■ | ■ | ரி |
| ■ | ம் | ■ | ■ | ■ | வு |

### குறுக்கெழுத்துப் போட்டி இல: 01 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

*முதலாம் பரிசு*
பா.மதுர்ஷன்,
199/5, சூசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.

*இரண்டாம் பரிசு*
எம்.ஆர்.ஹலீமா,
37, எலதலுவ வீதி,
பதுளை.

*மூன்றாம் பரிசு*
அ.டயானி,
47/54, ராஜசிங்க மாவத்தை,
ஹொனிட்டன் இடம்,
அவிசாவளை.

**ஆறுதல் பரிசுகள்**

த.விநோத்ராஜ்,
அன்னை இல்ல வீதி,
உப்புக்குளம், மன்னார்.

பி.ரசீகா,
2B, நோட்டன் வீதி,
மஸ்கெலியா.

மிஹார் அஹமட்,
56/3, பொல்வத்தை,
பரகஹாதெனிய,
வே-உட.

ஆர்.ஜெயலலிதா,
232, பாலகரா,
எட்டியாந்தொட்டை.

எஸ்.எம்.சதீக்,
R.D.S வீதி,
செம்மண்ணோடை,
மட்டக்களப்பு.

வி.மோனிஷா,
298, மேல்வீதி,
இறக்குவானை.

எம்.ஏ.சான்,
40/A, கெணல் வீதி,
புத்தளம்.

டி.கோகிலா,
22, IDH, பல்வாகம,
நாவலப்பிட்டி.

எம்.கே.எம்.ரிஹாம்,
479/03/17,திசாவத்தை,
தலுவக்கொட்டுவ,
கொச்சிக்கடை.

எம்.எம்.ஜிஹான்,
128/C, அரபா வீதி,
விளினையடி-01.






பெயர் : ..............................
வீட்டு முகவரி : ..............................
தொலைபேசி இல : ..............................
பாடசாலை : ..............................
அருகிலுள்ள நகரம் : ..............................
மாவட்டம் : ..............................

**மேலிருந்து கீழ்**

1. இது செய்தால் தண்டனை உண்டு.
2. செய்தியையும் குறிக்கும். (தலைகீழ்)
3. குப்பையில் இதுவும் கிடப்பதுண்டு.
5. இது போனால் சொல் போச்சு என்பர்.

**இடமிருந்து வலம்**

1. கூவும் பறவை.
3. கற்கால மனிதனின் வாழிடம்.
4. ஏதேனும் ஒரு விடயம் பற்றி எழுதப்படுவது.
5. சேவை என்றும் சொல்லலாம்.
6. சிலை வடிக்கவும் பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



நற்பிட்டிமுனையைச் சேர்ந்த ஐயூப்கான்-தஸ்பிஹா தம்பதியரின் செல்வப்புதல்வி நிதாஷி ஹிஜா, தனது மூன்றாவது பிறந்தநாளை 27.07.2009 அன்று கொண்டாடினார். இவரை குடும்பத்தவர்கள் அனைவரும் இறைவனின் அருள்பெற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றார்கள். (தகவல்: இ.யஸ்மின்)



கடுகண்ணாவையைச் சேர்ந்த ராபி-லுக்ஸியா தம்பதியரின் அன்பு மகன் ராஷிட் அஹ்மட், தனது நான்காவது பிறந்தநாளை 24.07.2009 அன்று அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

# உண்டதே உணவாக....



மாடுகள் அசைபோடுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். அதாவது, எதிரி குறித்த அச்சம் காரணமாகவே அவை அவசர அவசரமாக புல், இலை, தழைகளைக் கவ்வி விழுங்கி விடுகின்றன. பின்னர் எதிரி குறித்த அச்சம் நீங்கி, நிம்மதியாக இளைப்பாறும்போது, விழுங்கிய உணவை மறுபடியும் வாய்க்குக்கொண்டுவந்து அசைபோடுகின்றன. நரியும் இவ்வாறே செய்கின்றது. ஆனால், அது அசைபோடுவதில்லை. மாறாக, தான் சாப்பிட்ட உணவை வெளியே கக்கி, தன் குட்டிகளுக்கு இரையாகக் கொடுக்கின்றது.

# ஷ்... உங்களுக்கு மட்டும்!

✱ ஒருநாள் என்பது 24 மணித்தியாலங்களைக் கொண்டது என்று நாம் கூறுகின்றோம். ஆனால், விஞ்ஞானிகளின் துல்லியமான கணிப்பின்படி, ஒருநாள் என்பது 23 மணித்தியாலங்களும் 56 நிமிடங்களையும் கொண்டது என்று கூறப்படுகின்றது.

✱ இந்தியாவின் பாலைவனப்பகுதி ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு சதவீதம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றதாம்.

✱ ஒரு வாக்கியத்தை எழுதி முடித்ததும் முற்றுப்புள்ளி இடுகிறோம் அல்லவா? அந்த முற்றுப்புள்ளியை அறிமுகப்படுத்தியவர் ஓல்டஸ் மனுசியஸ் என்பவர். இவர் ஓர் அச்சகத் தொழிலாளியாவார்.


# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## சமாதானம்



மு.தா.முஹம்மத், தரம் - 10, அரசினர் மு.ஆ.வித்., அக்கரைப்பற்று-02.

## பழங்கள்



எஸ்.கெவின் கிரிஷான், சென்.ஜோன் பொஸ்கோ கல்., ஹட்டன்.




எஃப்.ருகையா ரிஸ்வி, தரம் - 3ᵀ, கொ/வுல்ஃபெண்டால் ம.ம.வித்., கொழும்பு-13.

## விரும்பும் வாகனம்



பி.பிரசாத், தரம் - 6C, முகத்துவாரம் இந்துக் கல்., கொழும்பு-15.



ஏ.குணசீலன், தரம் - 7B, அக்கரபத்தன த.ம.வித்., அக்கரபத்தன.

## வீட்டுத் தோட்டம்



என்.சங்கர்குமார், தரம் - 8, பட்டாவத்த த.வித்., பதுளை.





கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.எஃப்.பரூஸா, தரம் - 11, குளி/எதுன்கஹகொடுவ மு.ம.கல்., எதுன்கஹகொடுவ.




என்.எம்.பஸ்னி, தரம் - 7, மன்/மாவிலங்கேணி றோ.க.த.க.பாட., மாவிலங்கேணி.



எம்.எஃப்.ரீமா, தரம் - 2B, நூராணியா மு.ம.வித்., உயன்வத்த.



எஃப்.சுமையா, தரம் - 8B, இக்ரா மு.ம.வித்., உலப்பனை.



எஃப்.எஃப்.றிகாஸா, தரம் - 6C, அட்டாளைச்சேனை ம.ம.வித்., அட்டாளைச்சேனை.



எஸ்.றிப்கான், தரம் - 10A, திகழி மு.வித்., திகழி.

# 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் பிரதான சமயங்கள் சில...




1. கிறிஸ்தவம் 2. இஸ்லாம் 3. இந்து 4. பௌத்தம் 5. சீக்





## கிறிஸ்தவர்கள் அதிகமாக வசிக்கும் நாடுகள்



1. அமெரிக்கா
2. பிரேஸில்
3. ரஷ்யா
4. மெக்ஸிக்கோ
5. ஜேர்மனி



## இஸ்லாமியர்கள் அதிகமாக வசிக்கும் நாடுகள்



1. இந்தோனேஷியா
2. பாகிஸ்தான்
3. பங்களாதேஷ்
4. இந்தியா
5. துருக்கி



## இந்துக்கள் அதிகமாக வசிக்கும் நாடுகள்



1. இந்தியா
2. நேபாளம்
3. பங்களாதேஷ்
4. இலங்கை
5. மலேசியா



## பௌத்தர்கள் அதிகமாக வசிக்கும் நாடுகள்



1. ஜப்பான்
2. சீனா
3. தாய்லாந்து
4. வியட்நாம்
5. மியன்மார்
6. தென்கொரியா
7. இலங்கை




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# செல்லப்பிராணிகளுக்கான தனிப்பட்ட விமானசேவை

செல்லப்பிராணிகள் மாத்திரமே பயணம் செய்யக்கூடியதான விமான சேவையொன்று முதலாவது தடவையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

'பெட் எயர்வேஸ்' என்று இந்த விமான சேவைக்குப் பெயரிடப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த எலிஸா பைண்டர், டென் விச்செல் ஆகிய தம்பதியினரே மேற்படி விமான சேவையை ஆரம்பித்துள்ளனர்.

இந்த விமானத்தில் மனிதர்கள் பயணம் செய்ய அனுமதி கிடையாது. செல்லப்பிராணிகளுக்கு மாத்திரமே அனுமதி உள்ளது. இதில் உள்ள விசேடம் என்னவெனில், இந்தவிடயம் அறிவிக்கப்பட்ட மறுகணமே இரண்டு மாதங்களுக்கான







டிக்கட்டுக்கள் முன்பதிவு செய்யப்பட்டுவிட்டமையாகும்.

பொதுவாக பயணிகள் விமான சேவையில் குறிப்பிட்ட அளவில் மாத்திரமே செல்லப்பிராணிகள் ஏற்றப்படுகின்றன. அதிலும் அவை விமானத்தில் பொதிகளை வைக்கும் இருள் அடைந்த பகுதியிலேயே ஏற்றப்படுகின்றன. தமது செல்லப்பிராணிக்கு இதேநிலை ஏற்பட்டதாலேயே குறித்த தம்பதியினர் செல்லப்பிராணிகளுக்கென விசேட விமான சேவையொன்றை ஆரம்பிக்க தீர்மானித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அரிசி விலை அதிகரிப்பு வளர்முக நாடுகள் கஷ்டத்தில்

சர்வதேச வர்த்தக சந்தையில் தானிய வகைகளின் விலை ஓரளவிற்கு குறைந்துள்ளபோதிலும், அநேகமான அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் அரிசி, கோதுமை போன்றவற்றின் விலைகள் இன்னமும் அதிகரித்தே காணப்படுவதாக உலக உணவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இதனால், கோடிக்கணக்கிலான மக்கள் பெரிதும் கஷ்டத்தில் மூழ்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



2007 ஆம் ஆண்டில் உலக அளவில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையினால் அநேகமான நாடுகளில் மக்கள் போராட்டங்கள் நடைபெற்றதை யடுத்து தானிய வகைகளின் விலைகள் வீழ்ச்சியைக் கண்டது. எனினும், பல நாடுகளில் இந்த வீழ்ச்சியின் பலனை மக்களால் அனுபவிக்க முடியவில்லை. இதனால், 30 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விவசாயத்துறை உதவிகள் அவசியப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஜப்பானில் கீழ்சபைக்கான தேர்தல்

ஜப்பான் நாடாளுமன்றத்தின் கீழ் சபைக்கான தேர்தல்கள் ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நடத்துவதற்கு அந்நாட்டின் பிரதமர் டாரோ ஆசோ தீர்மானித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதற்கமைய, கீழ்சபை கலைக்கப்படும் என்று ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் பேச்சாளர் முன்கூட்டியே தெரிவித்துள்ளார்.

டோக்கியோ நகர சபைக்காக நடைபெற்ற தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியுற்றதாலேயே மேற்படி தீர்மானத்திற்கு பிரதமர் வந்ததாக கூறப்படுகின்றது.

**அற்லஸ் கேள்வி - 214**

**கேள்வி:** செல்லப்பிராணிகளுக்கான விமான சேவையின் பெயர் என்ன?

சரியான விடை......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 214,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 212 இன் சரியான விடை: டிமித்ரி மித்விடேவ்**

**பரிசு பெறுவோர்**

ஆர்.ஸ்டெபன்,
22, அநுராதபுரம் வீதி,
பெரிஸ்டர் புர, புத்தளம்.

எம்.ஆஷிக்,
76, பூர்ணவத்தை, கண்டி.

ஜெ.அக்காஷ்,
71, லோவர் வீதி, பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் ஆனந்தவுக்கும் வசந்திக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்



වසන්ති: ආයුබෝවන්.
ஆயுபோவன்.
வசந்தி: வணக்கம்.

ආනන්ද: ආයුබෝවන්.
ஆயுபோவன்.
ஆனந்த: வணக்கம்.

වසන්ති: පුත්තලමට බස් එක කීයටද?
புத்தளமட பஸ் எக கீயடத?
வசந்தி: புத்தளத்திற்கு பஸ் எத்தனை மணிக்கு?

ආනන්ද: පුත්තලම බස් එක උදේ නවයට.
புத்தளம பஸ் எக உதே நவயட்ட.
ஆனந்த: புத்தளம் பஸ் காலை ஒன்பது மணிக்கு.

වසන්ති: දැන් වෙලාව කීයද?
தென் வெளாவ கீயத?
வசந்தி: இப்போது நேரம் என்ன?

ආනන්ද: දැන් උදේ අටහමාරයි.
தென் உதே அடஹமாறய்.
ஆனந்த: இப்போது காலை எட்டரை.

වසන්ති: බස් එක මෙතනට එනවාද?
பஸ் எக மெதனட்ட எனவாத?
வசந்தி: பஸ் இவ்விடத்திற்கு வருமா?



ආනන්ද: බස් එක මෙහෙ එන්නේ නැහැ.
பஸ் எக மெஹெ என்னே நெஹெ.
ஆனந்த: பஸ் இவ்விடத்திற்கு வராது.

හතරවෙනි වේදිකාවට යන්න.
ஹதறவெனி வேதிகாவட யன்ன.
நான்காவது மேடைக்குப் போங்கள்.

වසන්ති: හොඳයි, බොහෝම ස්තුතියි.
ஹொந்தய், பொஹோம ஸ்தூதிய்.
வசந்தி: நல்லது, மிக்க நன்றி.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: புத்தளத்திற்கு பஸ் எத்தனை மணிக்கு?
පුත්තලමට බස් එක කීයටද?

i. காலை ஒன்பது மணிக்கு.

..............................................................

ii. இப்போது நேரம் என்ன?

..............................................................

iii. நான்காவது மேடைக்குப் போங்கள்.

..............................................................






இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு' நிலை வாக்கியங்களை, 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைப்பதற்கு, 'Did' எனும் துணைவினைச் சொல் (Auxiliary Verb) உதவிபுரிகின்றது என முன்னைய பாடத்தில் கற்றோம் அல்லவா?

அவ்வாறே, இறந்தகால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை, 'எதிர்மறை' வாக்கியங்களாக மாற்றியமைப்பதற்கும் 'Did' எனும் துணைவினைச் சொல் உதவிபுரிகின்றது. இவற்றை உதாரணங்கள் மூலம் பயில்வோம்.

(அ) I went. (Affirmative)
நான் போனேன். (உடன்பாடு)

* மேற்படி 'உடன்பாடு' வாக்கியத்தை, 'எதிர்மறை' வாக்கியமாக மாற்றியமைக்கும்போது, அவ்வாக்கியம் பின்வருமாறு அமையும்.

(ஆ) I did not go. (Negative)
நான் போகவில்லை. (எதிர்மறை)

**குறிப்பு:** மேற்படி, 'உடன்பாடு' வாக்கியத்தில் காணப்படுகின்ற 'Went' எனும் வினைச்சொல், இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb) ஆகும். இவ்வினைச் சொல், 'எதிர்மறை' வாக்கியத்தில் 'Did' சகிதம் கையாளப்படுகின்றபோது, 'go' என நிகழ்கால வினைச்சொல்லாக (Present Tense Verb) மாற்றம் அடைவதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**மேலும், ஒரு விளக்கம்:** மேற்படி 'எதிர்மறை' வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'Did' என்பதற்கு தனியான அர்த்தம் கொள்ளப்படுவதில்லை. இங்கே, 'Did' என்பது ஓர் உதவிபுரியும் வினைச்சொல்லாக (Helping Verb) மாத்திரமே செயல்படுகின்றது.

**மேலும் உதாரணங்களை ஒப்பிட்டுப் பயில்வோம்.**

(அ) You bought. (Affirmative)
நீ வாங்கினாய். (உடன்பாடு)

(ஆ) You did not buy. (Negative)
நீ வாங்கவில்லை. (எதிர்மறை)

**குறிப்பு:** இங்கும் உடன்பாடு வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'bought' என்னும் இறந்தகால வினைச்சொல், (Past Tense Verb) 'எதிர்மறை' வாக்கியத்தில், 'buy' என நிகழ்கால வினைச்சொல்லாக (Present Tense Verb) மாற்றம் பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

(அ) I took. (Affirmative)
நான் எடுத்தேன். (உடன்பாடு)

(ஆ) I did not take. (Negative)
நான் எடுக்கவில்லை. (எதிர்மறை)

**இவற்றின் நீளமான வாக்கியங்களையும் சற்று நோக்குவோம்.**

(அ) I went to the shop. (Affirmative)
நான் கடைக்குப் போனேன். (உடன்பாடு)

(ஆ) I did not go to the shop. (Negative)
நான் கடைக்குப் போகவில்லை. (எதிர்மறை)

(இ) You bought a bicycle. (Affirmative)
நீ சைக்கிள் ஒன்று வாங்கினாய். (உடன்பாடு)

(ஈ) You did not buy a bicycle. (Negative)
நீ சைக்கிள் ஒன்றை வாங்கவில்லை. (எதிர்மறை)

(உ) I took that parcel. (Affirmative)
நான் அந்தப் பொதியை எடுத்தேன். (உடன்பாடு)

(ஊ) I did not take anything. (Negative)
நான் எதனையும் எடுக்கவில்லை. (எதிர்மறை)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மந்திரக் குதிரை

முன்னொரு காலத்தில் முதியவர் ஒருவர் இருந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். மூத்த புதல்வர்கள் இருவரும் மிகவும் சுறுசுறுப்பானவர்கள், இவர்கள் இருவரும் அழகிய ஆடைகளையே அணிய விரும்பினார்கள். அத்துடன், சிக்கனமான குடியானவர்களாகவும் இருந்தனர். ஆனால், இளையவனாகிய முட்டாள் இவான் இந்தப் பண்புகள் எதனையும் பெற்றிருக்கவில்லை. தனது நேரத்தைப் பெரும்பாலும் சூட்டடுப்புப் பரண்மேல் உட்காருவதிலேயே செலவிட்டான். காளான் சேகரிப்பதற்காக மட்டுமே அருகில் உள்ள காட்டிற்குச் செல்வான்.

இதேவேளை, முதியவராகிய அவர்களின் தந்தையார் நோயினால் மரணப்படுக்கையில் இருந்தார். அப்போது அவர் தனது மூன்று புதல்வர்களையும் அழைத்துக் கூறினார்; ''நான் இறந்ததும் மூன்று இரவுகள் என்னுடைய புதைகுழிக்கு சாப்பிடுவதற்குக் கொஞ்சம் ரொட்டியை எடுத்துக்கொண்டு நீங்கள் அவசியம் வரவேண்டும்'' என்று கூறிவிட்டு முதியவர் இறந்துவிட்டார்.

முதல்நாள் இரவு புதைகுழிக்குச் செல்ல வேண்டியவன் மூத்த சகோதரன். அவனோ போவதற்கு விரும்பாதிருக்க வேண்டும் அல்லது பயந்திருக்க வேண்டும். எனவே, முட்டாள் இவானிடம் கூறினான்; ''எனக்குப் பதிலாக நீ இன்று இரவு அப்பாவினுடைய புதைகுழிக்குச் சென்றால் உனக்கு நான் தேன் பணியாரம் வாங்கித் தருவேன்'' என்று கூறினான்.

இவான் உடனே இதற்கு ஒப்புக்கொண்டான். கொஞ்சம் ரொட்டியை எடுத்துக்கொண்டு தன் தந்தையினுடைய புதைகுழிக்குச் சென்றான். புதைகுழியின் அருகே உட்கார்ந்து என்ன நடைபெறப்போகிறது என்பதைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தான். நள்ளிரவு பன்னிரெண்டு மணி அடிக்கவும் பூமி இரண்டாகப் பிளக்க, தமது புதைகுழியை விட்டு மேலே எழுந்த வயதான அவர்களின் தந்தையார் கூறினார்.

''யார் அங்கே? ஓ! என் மூத்த மகனா? ருஸ் நாட்டில் என்ன விஷயங்கள் உள்ளன என்று எனக்குச் சொல். நாய்கள் குரைக்கின்றனவா? ஓநாய்கள் ஊளையிடுகின்றனவா? குழந்தைகள் அழுகின்றனவா?'' என்று கேட்டார்.

இவான் பதிலளித்தான், ''நான்தான் உங்கள் மகன் தந்தையே. ருஸ் நாட்டில் எல்லாம் அமைதியாக இருக்கின்றன''

பின்னர் இவான் கொண்டு சென்றிருந்த ரொட்டியை வயிறு நிறையச் சாப்பிட்ட தந்தை, திரும்பவும் தனது புதைகுழிக்குள் படுத்துக்கொண்டார். இவான் திரும்பி வரும் வழியில் காளான்களைச் சேகரித்துக் கொண்டு வீடு திரும்பினான். வீட்டை அடைந்தபோது மூத்த சகோதரன் கேட்டான்; ''நம் தந்தையைப் பார்த்தாயா?''

''ஆமாம், பார்த்தேன்'' இவான் பதிலளித்தான்.




''நீ கொண்டு போன ரொட்டியை அவர் சாப்பிட்டாரா?''

''ஆமாம். வயிறு நிறையச் சாப்பிட்டார்''

நாள் ஒன்று கழிந்தது. புதைகுழிக்குப் போவது இன்று இரண்டாவது சகோதரனுடைய முறை. ஆனால், அவன் போவதற்கு விரும்பாதிருக்க வேண்டும் அல்லது பயந்திருக்க வேண்டும். எனவே, இவானிடம் கூறினான்.

''இவான், எனக்குப் பதிலாக நீ சென்றால், உனக்கு மரப்பட்டையில் செருப்புச் செய்து தருவேன்''

''நல்லது. நான் போகிறேன்'' என்றான் இவான்.

கொஞ்சம் ரொட்டியை எடுத்துக்கொண்டு தன் தந்தையினுடைய புதைகுழிக்குச் சென்று அங்கே உட்கார்ந்து காத்திருந்தான். நள்ளிரவு பன்னிரெண்டு மணி அடிக்கவும் பூமி இரண்டாகப் பிளக்க, தமது புதைகுழியை விட்டு மேலே எழும்பிய வயதான அவர்களின் தந்தையார் கூறினார்.

''யார் அங்கே? ஓ, என் இரண்டாவது மகனா? ருஸ் நாட்டில் என்ன விஷயங்கள் உள்ளன என்று எனக்குச் சொல். நாய்கள் குரைக்கின்றனவா? ஓநாய்கள் ஊளையிடுகின்றனவா? குழந்தைகள் அழுகின்றனவா?''

**நள்ளிரவு பன்னிரெண்டு மணி அடிக்கவும் பூமி இரண்டாகப் பிளக்க, தமது புதைகுழியை விட்டு மேலே எழுந்தார் வயதான அவர்களின் தந்தையார்**

இவான் பதிலளித்தான், ''நான்தான் உங்கள் மகன் தந்தையே. ருஸ் நாட்டில் எல்லாம் அமைதியாக இருக்கின்றன''

பின்னர் இவான் கொண்டு சென்றிருந்த ரொட்டியை வயிறு நிறையச் சாப்பிட்ட தந்தை, திரும்பவும் தனது புதைகுழிக்குள் படுத்துக்கொண்டார். திரும்பி வரும்வழியில் காளான்களைச் சேகரித்துக் கொண்டு வீடு திரும்பினான் இவான். வீட்டை அடைந்த போது அவனது இரண்டாவது சகோதரன் கேட்டான்; ''நம் தந்தையைப் பார்த்தாயா?''

''ஆமாம், பார்த்தேன்'' இவான் பதிலளித்தான்.

''நீ கொண்டு போன ரொட்டியை அவர் சாப்பிட்டாரா?''

''ஆமாம் வயிறு நிறையச் சாப்பிட்டார்''

மூன்றாவது இரவு புதைகுழிக்குச் செல்ல வேண்டியவன் இவான்.

(தொடரும்...)

# தந்தையின் புத்திமதி



ஒரு காட்டில் பெரிய ஆண் புலி ஒன்று வசித்துவந்தது. ஒருநாள் மதியவெயிலில் அது மிகப்பெரிய மான் ஒன்றை அடித்துக் கொன்று,பின்னர் மெதுவாக அதன் இறைச்சியை ரசித்து உண்ண ஆரம்பித்தது. வயிறு முட்ட உண்ட புலிக்கு தாகம் எடுத்தது. நேராகக் குட்டையை நோக்கிச் சென்றது.

அங்கு ஒரு பன்றிக்குட்டி குட்டையில் குளித்து, நீச்சல் அடித்துக் கொண்டிருந்தது. புலியைப் பார்த்த பன்றிக் குட்டிக்கு பயம் ஏற்பட்டுவிட்டது. இதனால், கரையில் ஒரு பக்கமாக அது ஒதுங்கி நின்றது.புலி அந்த பன்றிக் குட்டியைக் கண்டுகொள்ளவே இல்லை அதற்குத் தாகம் அதிகமாக இருந்ததால் தண்ணீர் அருந்துவதிலேயே நாட்டமாக இருந்தது. ஆனால், அத்தண்ணீர் பன்றிக்குட்டியின் குளியலால் நாற்றம் எடுத்தது.

துர்நாற்றம் வீசுவதைப் புலியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே, வேண்டாவெறுப்பாக ஒருமுறைதண்ணீரை நாக்கால் நக்கியது. அதைக் குடிப்பதற்கு புலிக்கு மனம் வரவில்லை. எனவே, அது பன்றிக் குட்டியைப் பார்த்து உறுமி விட்டு, வேறு நல்ல தண்ணீர் இருக்கும் இடத்தை தேடிச் செல்ல ஆரம்பித்தது. புலி திரும்பிச் செல்வதைப் பார்த்த பன்றிக்குட்டி, ஓஹோ... இந்தப் புலி என்னைப் பார்த்து பயந்து போய்விட்டது. அதனால் தான் வந்த வேகத்திலேயே அது திரும்பிச் செல்கிறது என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டது. இதனால், பன்றிக்குட்டி ஒரே தாவாகத்தாவி புலியின் முன்னே சென்று நின்றது.

''என்னைப் பார்த்து ஏன் ஓடுகிறாய்? வா நாம் இருவரும் சண்டை போடலாம்'' என்று அழைத்தது. மான் இறைச்சியை வயிறு முட்டத் தின்று விட்டதால் பசி அடங்கிப் போயிருந்த புலி. பன்றிக் குட்டியை அலட்சியத்தோடு பார்த்து, ''இன்றைக்கு வேண்டாம் நாளை இதே இடத்திற்கு வா பார்க்கலாம்'' என்று சொல்லி விட்டுச் சென்றது.

இந்தப்புலி சரியான பயந்தாங்கொள்ளியாக இருக்கிறது. அதனால்தான் இன்று வேண்டாம். நாளைக்கு வருகிறேன் என்கிறது என்று நினைத்த பன்றிக் குட்டிக்கு கர்வமும் சந்தோஷமும் தாங்க முடியவில்லை. அது நேராக தன் இருப்பிடத்திற்குப் போய் தன் குடும்பத்தவரிடம், புலியுடன் தான் சண்டை செய்யப் போவதைச் சொன்னது. இதைக் கேட்ட பன்றிக் குடும்பத்திற்குப் பயம் பிடித்துக் கொண்டது. வீண் வம்பை விலை கொடுத்து வாங்கி வந்து விட்டாயே? புலி ஓர் அறை கொடுத்தால் அதற்குப் பிறகு நீ இருக்கமாட்டாய் தெரியுமா? என்றது அதன் தாய்ப் பன்றி. பன்றிகள் எடுத்துச் சொன்ன பிறகுதான் தன் உடல் வலிமை புலியின் ஆற்றலைவிட எவ்வளவு குறைவானது என்பது பன்றிக் குட்டிக்குத் தெரிய ஆரம்பித்தது. உடனே பயம் பிடித்துக் கொண்டது பன்றிக் குட்டியின் பயத்தைப் பார்த்தது அப்பா பன்றி, ''நாளை நீ புலியோடு சண்டை செய்யப் போகிறாயா?'' என்று கேட்டது.

''ஆமாம். ஆனால், நான் போகப் போவது இல்லை'' என்றது பன்றிக் குட்டி.

''நீ போகாவிட்டால் புலி சும்மா இருக்குமா? அதனிடம் சவால் விட்டு விட்டு வந்திருக்கிறாயே? உன்னை தேடிக் கொண்டு இங்கேயே வந்துவிடும். அப்படி வந்தால் நம் குடும்பத்தினர் அத்தனை பேரையும் ஆத்திரம் கொண்டு அழித்து விடும்''

''ஐயோ அது கூடாது அப்பா. நான் சண்டைக்குப் போய் செத்தாலும் சாகிறேன்''என்றது பயத்தோடு.

''நீ புலியோடு சண்டைக்குப் போ. ஆனால்,நான் சொல்வது போல் செய்'' என்று கூறிய அப்பா பன்றி ஒரு ஆலோசனையையும் கூறியது.

மறுநாள் காலையில் எழுந்த பன்றிக்குட்டி காட்டில்இருக்கும் யானை சாணத்திலும். காட்டெருமை சாணத்திலும் புரண்டு புரண்டு எழுந்தது. நாற்றம் சகிக்க முடியவில்லை. அப்படியே அது புலி குறிப்பிட்ட குட்டையை அடைந்தது. அங்கே புலி தயாராக காத்திருந்தது. பன்றிக் குட்டி வருவதைப் பார்த்த புலி. உதடுகளை நாக்கால் நக்கிக் கொண்டது அருமையான விருந்து வருகிறது அல்லவா? ஆனால், பன்றிக் குட்டி புலியின் எதிரே வந்ததும் புலிக்கு சாணத்தின் நாற்றம் தாங்க முடியவில்லை, அது ஒரு அடி பின் வாங்கி நின்றது. பின்னர் பன்றிக் குட்டியை பார்த்து, ''சே... அருகே வராதே. நாற்றம் சகிக்க முடியவில்லை'' என்றது.

''அப்படியானால் என்னுடன் சண்டை செய்ய வரமாட்டாயா?'' என்றது பன்றிக்குட்டி.

''முதலில் நீ இங்கிருந்து கிளம்பு. எனக்குக் குடலைப் பிரட்டிக் கொண்டு வாந்தி வருவதைப் போல் இருக்கிறது'' என்ற புலி, மேலும் இரண்டு அடிகள் பின்னால் தள்ளி நின்றது. அது போதும் என்று நினைத்த பன்றிக் குட்டி தலைதெறிக்கும் வேகத்தில் ஓடி மறைந்தது. அப்பா பன்றி சொன்ன யோசனையால் பன்றிக்குட்டி புலியிடம் சிக்கி உயிர் விடாமல் தப்பித்துக்கொண்டது.

பலத்தை உணராமல் யாரும் வீம்பு செய்யக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃபிளின் டொஃபின் ஓய்வு



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் என்ட்ரு ஃபிளின் டொஃப் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளதையிட்டு இங்கிலாந்து ரசிகர்கள் பெரும் கவலை அடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நீண்ட நாட்களாக உடல் உபாதைகளுக்கு ஆளாகி வருவதைக் கருத்தில் கொண்டே ஃபிளின் டொஃப் தனது ஓய்வு முடிவை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாக இங்கிலாந்து அணி போட்டியிட்ட 48 டெஸ்ட் போட்டிகளில் 25 போட்டிகளில் இவ்வாறு உடல் உபாதையின் காரணமாக ஃபிளின் டொஃபினால் கலந்து கொள்ள முடியாமல் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவரது கால் மூட்டுக்களில் நான்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டமை, தோள்பட்டை முழங்கால் ஆகிய பகுதிகளில் உபாதைகள் ஏற்பட்டுள்ளமை ஆகியனவே ஃபிளின் டொஃபை பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளது.

எனினும், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவேன் என்று ஃபிளின் டொஃப் அறிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டில் 'ஏஷஸ்' தொடரை இங்கிலாந்து அணி வெற்றி கொள்வதற்கு பிரதான காரணகர்த்தாவாக இருந்தவரும் இவரேயாவார். எனினும், 2006 ஆம் ஆண்டின் பின்னர் அவர் அதிகளவில் சோபிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# நியூஸிலாந்து அணியின் இலங்கை விஜயம்

ஓகஸ்ட் மாதம் இலங்கை வருகின்ற நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள், 'டுவென்டி டுவென்டி' போட்டிகள் இரண்டு மற்றும் முக்கோண ஒருநாள் போட்டித் தொடரிலும் கலந்துகொள்ளவுள்ளது.

டெஸ்ட் மற்றும் டுவென்டி டுவென்டி போட்டிகளின் பின்னர் முக்கோண ஒருநாள் போட்டித்தொடரில் நியூஸிலாந்து, இலங்கை, இந்தியா ஆகிய அணிகள் போட்டியிடவுள்ளன.

இலங்கை-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஓகஸ்ட் 18 ஆம் திகதி காலி விளையாட்டரங்கிலும் இரண்டாவது டெஸ்ட் போட்டி ஓகஸ்ட் 26 ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.ஸி மைதானத்திலும் நடைபெறும்.

### போட்டி காலஅட்டவணை வருமாறு;

**டெஸ்ட்**

**முதலாவது - ஓகஸ்ட் 18-22 வரை (காலி மைதானம்)**
**இரண்டாவது - ஓகஸ்ட் 26-30 வரை (எஸ்.எஸ்.ஸி)**

**டுவென்டி டுவென்டி**

**முதலாவது - செப்டெம்பர் 2 (ஆர்.பிரேமதாச அரங்கு)**
**இரண்டாவது - செப்டெம்பர் 3 (ஆர்.பிரேமதாச அரங்கு)**

**முக்கோண ஒருநாள் போட்டிகள் (ஆர்.பிரேமதாச அரங்கில்)**

**செப்டெம்பர் 8 - இலங்கை, நியூஸிலாந்து**
**செப்டெம்பர் 10 - இலங்கை, இந்தியா**
**செப்டெம்பர் 12 - இந்தியா, நியூஸிலாந்து**
**செப்டெம்பர் 14 - இறுதிப்போட்டி**

## தனது சாதனையை முறியடித்த பெல்ஃப்ஸ்!



ஒலிம்பிக் பதக்க சாதனையாளரான அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கல்பெல்ஃப்ஸ் சில தினங்களுக்கு முன்னர் தனது முன்னைய சாதனையொன்றை மீண்டும் தானே முறியடித்துள்ளார்.

அமெரிக்காவின் இன்டியானோவில் நடைபெற்ற 'செம்பியன்' நீச்சல் போட்டிகளிலேயே அவர் தனது சாதனையைப் புதுப்பித்துள்ளார். இவர் 100 மீற்றர் வண்ணாத்தி நீச்சல் போட்டியின்போது 100 மீற்றர் நீச்சல் தூரத்தை 50.22 செக்கன்களில் கடந்தே இச்சாதனையை இப்போட்டிகளில் நிகழ்த்தியுள்ளார். இதில் முதல் 50 மீற்றர்களைக் கடப்பதற்கு 20.23 செக்கன்களும் மிகுதி 50 மீற்றர்களை கடப்பதற்கு 20.01 செக்கன்களுமே பெல்ஃப்ஸுக்கு தேவைப்பட்டிருந்தது.

இந்த சாதனையை நிகழ்த்தியபின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த பெல்ஃப்ஸ் இத்தாலியின் ரோம் நகரில் நடைபெறவுள்ள 'உலக செம்பியன்' நீச்சல் போட்டிகளில் தனது சாதனையை மீண்டும் முறியடிப்பதே தனது அடுத்த இலக்கு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 2011 உலகக் கிண்ண அரங்குகள் தெரிவு

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கையில் நடைபெறவுள்ள போட்டிகளை நடத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக நான்கு விளையாட்டரங்கங்கள் தயார்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இவற்றில் மூன்று அரங்கங்களே




போட்டிகளை நடத்துவதற்காகத் தெரிவு செய்யப்படும்.

இதன்படி, கொழும்பு ஆர்.பிரேமதாச அரங்கு, ரங்கிரி தம்புல்ல அரங்கு, (கட்டுமான வேலைகள் நடைபெறுகின்றன) சூரியவெவ மற்றும் பல்லேகெலே அரங்கம் ஆகியனவே மேற்படி தெரிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் ஒன்று தெரிவின்போது நிராகரிக்கப்படுமாயின் அதற்கு மாற்றீடாக கொழும்பு எஸ்.எஸ்.ஸி அரங்கும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

எனவே, உரிய விளையாட்டரங்கங்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்காக அவற்றை பார்வையிடுவதற்கென சர்வதேச கிரிக்கெட் சபையின் விசேட குழுவொன்று எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கை வரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் பகிஷ்கரிப்பு?

2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளை பாகிஸ்தான் பகிஷ்கரிக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி, போட்டிகளை பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பகிர்ந்து விளையாடுவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் அணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து, பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருப்பதாக காரணம் காட்டி குறித்த உலகக் கிண்ணப் போட்டிகளை பாகிஸ்தானில் நடத்துவதில்லை என்று சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. அதற்கு மாற்றீடாக பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கருத்தில்கொண்டு 126 கோடி ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

எனினும்,போட்டிகளை பாகிஸ்தானில் நடத்தாதது பாரிய தாக்கமாக உணர்வதாலேயே பாகிஸ்தான் மேற்படி போட்டிகளைப் பகிஷ்கரிப்பதற்குத் திட்டமிடுவதாக கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர நோக்குவோம்-ஒன்றிணைவோம் மின்சாரத்தை சேமிப்போம்!

கனிய எண்ணெய், மின்சாரம் போன்ற எரிசக்திகள் நவீன உலகின் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதில் பிரதான இடத்தை வகிக்கின்றன. மனையியல் செயற்பாடுகளிலும் வர்த்தக மற்றும் போக்குவரத்து சேவைகள் என சகலவிடயங்களிலும் இந்த சக்திகள் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. இந்த சக்தி விநியோகம் ஏதோ ஒருவகையில் நிறுத்தப்பட்டால், மேற்கூறிய அனைத்து செயற்பாடுகளும் நின்றுவிடும். அதனால், ஏற்படும் இழப்புகளை விரைவில் ஈடுசெய்ய முடியாது.

மீளுருவாக்கம் செய்ய முடியாத எரிசக்தி வளமாகக் கருதப்படும் கனிய எண்ணெய் மூலம் உலகின் சக்திவளத் தேவைகளின் பெரும்பகுதி நிவர்த்தி செய்யப்படுகின்றது. இதன் தேவை (கேள்வி) நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதானது, உலகம் இன்று எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற பாரிய நெருக்கடியாகவும் இருக்கின்றது. அந்தவகையில், இலங்கையும் இத்தகைய பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றது.

சனத்தொகை அதிகரிப்போடு, நாட்டின் சக்திவள பாவனையும் அதிகரிக்கின்றது. இதில் மின்சக்தி நெருக்கடி முதலிடத்தை வகிக்கின்றது. 1990 ஆம் தசாப்தத்தின் முன்னரைப் பகுதிவரை இந்நாட்டின் மின்வலுத் தேவையின் பெரும்பகுதியை நீர் மின்சக்தியே நிறைவேற்றி வந்தது. இன்றும் நீரை அடிப்படையாகக் கொண்டு மின்சக்தியை உற்பத்தி செய்வது உச்சநிலையை அடைந்துள்ளது. அதனால், இந்நாட்டின் மின்வலுவின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு துரித வழிமுறையாக அனல் மின்நிலையங்கள் தாபிக்கப்பட்டன. இன்றளவில் இந்நாட்டின் மின்சக்தி தேவைகளில் 65 சதவீதமானவற்றை அனல் மின்நிலையங்களே பூர்த்தி செய்கின்றன. அதற்குத் தேவையான கனிய எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்காக வருடமொன்றிற்கு 25,840 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. அதனால், மின் அலகொன்றை உற்பத்தி செய்வதற்காக பெருந்தொகையான பணத்தைச் செலவிட வேண்டியநிலை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையமும் மேல் கொத்மலை நீர் மின்நிலையமும் அமைக்கப்பட்டதனை அடுத்து, மின் உற்பத்தியை அதிகரிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனினும், அனல் மின்நிலையங்கள் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்குப் பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டியுள்ளது. அது அபிவிருத்தி அடைந்துவரும் நாடென்ற வகையில் இலங்கை முகம் கொடுக்கும் பாரிய சவாலாகும். இவ்வாறு பெரும் செலவின் மத்தியில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 25% மான அளவு எத்தகைய பயனும் இல்லாமல் விரயமாகின்றது. மின்சாரத்தை பாவிக்கும்பொழுது நாம் காட்டும் அக்கறையின்மையும் மின்சக்தி குறித்து எமது அறிவின்மையுமே அதற்கான முக்கிய காரணங்களாகும். எனவே, மின்சக்தியை முகாமைப்படுத்துவதனூடாக மின்சக்தியை சேமிப்பது மிக முக்கியமானதாகும்.



## மின்சாரத்தை சேமிப்போம்-பரிசுகளை வெல்வோம்!

**மின்சக்தியை சேமிப்பதற்கு பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் 'தூர நோக்குவோம்-ஒன்றிணைவோம்-மின்சாரத்தை சேமிப்போம்! எனும் தொனிப்பொருளில் 'விஜய்' பத்திரிகையும் இலங்கை நிலைபெறுதகு அதிகாரசபையும் இணைந்து, 'விஜய்' பத்திரிகையில் கட்டுரைகளை வெளியிடவும் போட்டிகளை நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**'விஜய்' பத்திரிகையில் வெளியாகும் கட்டுரைத் தொடர்களில் மின்சக்தி முகாமைத்துவம், மின்சக்தி சேமிப்பு மற்றும் மாற்று மின்சக்தி பாவனை என்பன குறித்து பாடசாலை மாணவர்கள் அறிவூட்டப்படவுள்ளனர். அவ்வாறே, தமது வீடுகளில் மின்சக்தியை சேமிப்பதனூடாக ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பணப்பரிசுகளை வெல்வதற்கும் 'விஜய்' வாசகர்களுக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.**

**அதன்படி, ஓகஸ்ட் மாதம் தொடக்கம் நொவெம்பர் மாதம் வரை வீட்டின் மின் அலகு பாவனைகளை கூடியளவில் குறைத்துக்கொள்பவருக்கு பணப்பரிசுகள் வழங்கப்படும். அவ்வாறே, வாரந்தோறும் கேட்கும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பி, வெற்றி பெறும் வெற்றியாளர்களில் 40 பேருக்கு தலா 1000 ரூபா வீதம் 40 பணப்பரிசுகளை வெற்றிகொள்ளும் வாய்ப்பும் கிட்டும்.**

**இந்த கட்டுரைத் தொடர்களில் மின்சாரத்தை சேமிப்பது குறித்து பிள்ளைகளை ஈடுபடுத்தும் போட்டி தொடர்பான விபரங்கள் அடுத்தவார 'விஜய்' பத்திரிகையில் வெளியிடப்படும். வீட்டில் மாதாந்த மானிவாசிப்பினை பதிந்துகொள்வதற்கான மின்பட்டியலின் தரவுக் குறியீட்டுப் பத்திரத்தையும் 'விஜய்' பத்திரிகையுடன் பெற்றுக்கொள்ள வாசகர்களுக்கு முடியும்.**


**நிலைபெறுதகு வலு அதிகாரசபை மற்றும் விஜய் பத்திரிகை தேசிய நலனையிட்டு ஒன்றிணைகின்றன**

**தூர நோக்குவோம் - ஒன்றிணைவோம்**

**மின்சாரத்தை சேமிப்போம்**

**மின்சாரத்தை சேமிப்பதில் பங்களித்து**

**ரூ.10 லட்சம் பெறுமதியான**

**பரிசுகளை வெல்லுங்கள்.**







**மின்சாரத்தை சேமிப்பதில் பங்களிப்பு செலுத்துங்கள்; லட்சக்கணக்கில் பணப்பரிசுகளை வெல்லுங்கள்....!**

**இறுதி மாபெரும் சீட்டிழுப்பின் மூலம்**

*வாராந்தம் 1000 ரூபா பரிசுகள் 480*

முதல் பரிசு ரூபா 150,000.00 → இரண்டாம் பரிசு ரூபா 100,000.00 → மூன்றாம் பரிசு ரூபா 50,000.00

* தலா 10,000 ரூபா வீதம் 12 ஆறுதல் பரிசுகள்.
* பாதுகாப்பு நோக்கத்துடன்கூடிய 10 செயற்றிட்டங்களுக்கு தலா 10,000 ரூபா வீதம்.

500 சான்றிதழ்கள் — போட்டி விபரங்கள் அடுத்த வாரத்தில்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 216 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-227) |
|---|---|---|---|---|
| அப்துல் ரஹ்மான், தரம் - 2, அப்துல் ஹமீட் மு.வித்., இறத்தோட்டை. | அகமட் அப்கர், தரம் - 5, அக்/மு.ம.கல்., அக்கரைப்பற்று-06 | பா.ஹனுஷ்யா, தரம் - 7, இ.கி.மி.ம.வித்., கல்முனை. | க.சௌஜன்யா, தரம் - $6^{V}$, வின்சற் ம.கல்., மட்டக்களப்பு. | பி.பிரியங்கா, தரம் - 11, பாக்கியம் தே.கல்., மாத்தளை. |

## அறிவுக்கு விருந்து 216 விடைகள்

**போட்டி: 03**

பனாமா கால்வாய்

**போட்டி: 04**

1. professor
2. mixture
3. piano
4. whale
5. autobiography




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.08.05 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 219**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## வழி காட்டுங்கள் 1



## சரியான உருவை அமைக்க 3



## கணக்குப் புதிர் 5

a) ஓர் எண்ணுடன் அதே எண்ணின் இரு மடங்கைக் கூட்டினால் 93 வரும். அந்த எண் எது?

..............................................

b) ஒரு குளத்தில் 3 மலர்கள் இருந்தன. அங்கு சில பறவைகள் பறந்து வந்தன. ஒவ்வொரு மலரிலும் ஒவ்வொரு பறவை அமர்ந்தால், ஒரு பறவைக்கு மட்டும் அமர்வதற்கு மலர் கிடைக்காமல் போகும். அதுவே ஒவ்வொரு மலரிலும் இரண்டு பறவைகள் அமர்ந்தால், ஒரு மலர் மீதமாகும். அப்படியாயின் அங்கு எத்தனை பறவைகள் இருந்தன?

..............................................

## பிழை திருத்துக 4


A
1. இழையான் - ..............................
2. சுவர்கம் - ..............................
3. குறல்வலம் - ..............................
4. தீக்கதரிசு - ..............................
5. முணும்முனுப்பு - ..............................


B
1. cashiyar - ..............................
2. grajuate - ..............................
3. sise - ..............................
4. bagroun - ..............................
5. orrange - ..............................

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக 2





## குறுக்கெழுத்துப் போட்டி - 227 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. கால்
02. தரிசு
03. ஆடி
04. கொல்லர்
05. பருத்தி
06. எவை
07. வயது

**இடமிருந்து வலம்**

01. காந்தள்
04. கொடி
05. பசு
06. எரு
07. வலது
08. வைத்தியர்

**பாராட்டுப் பெறுவோர்**


அன்ரனிஸ் லெம்பேட், தரம் - 12, றோ.க.த.ம.வித்., கொச்சிக்கடை.

ஏ.ஆர்.எம்.முர்ஷித், தரம் - $7^{B}$, அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹபுகஸ்தலாவ.

எச்.ஆர்.பேகம், தரம் - 8, ஸாஹிரா வித்., குருவிட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் பாரிய நதிக்குகை





உலகின் மிகப் பாரிய நதிக்குகை வியட்நாமில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நதிக்குகை என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

நீரானது, குகையொன்றுக்குள் தொடர்ந்து சலசலவென ஓடிக் கொண்டு இருக்குமானால் அந்தக்குகை நதிக்குகை எனப்படும். பிரித்தானியாவின் 13 பேர் கொண்ட குகை கண்டுபிடிப்புக் குழுவினர் வியட்நாமில் இந்த நதிக்குகையை கண்டுபிடித்தனர். இதுவே, உலகின் மிகப் பாரிய நதிக்குகை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.இந்தக் குகை ஹங் சன்டூங்கேவ் (Hang Son Doong Cave) அல்லது மலை ஆற்றுக்குகை (Mountain River Cave) என்று அழைக்கப்படுகிறது. ஹனோய் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பிரதிநிதிகளின் உதவியுடனேயே பிரித்தானியக் குழுவினர் இந்தக் கண்டுபிடிப்பை நடத்தியுள்ளனர்.

இந்த நதிக்குகை 650 அடிக்கு மேலான உயரமும் 500 அடி அகலமும் கொண்டதென தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நதிக்குகை ஏற்கனவே உள்ள பெரிய நதிக் குகையான மலேசியாவின், மான்குகையை (Deer Cave) விட இரண்டு மடங்கு பெரியது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குகை கண்டுபிடிப்புக் குழுவினரில் ஒருவரான அடம் ஸ்பிளேம் (Adam Spillame) இதுபற்றிக் கூறுகையில், ''இது உண்மையில் வியக்கத்தக்க வகையிலான நதிக்குகையாகும். பிரித்தானிய குழுவினரின் கண்டுபிடிப்புகளில் முக்கியமானவற்றில் இதுவும் ஒன்றாகும்'' என்று கூறினார்.




மலேசியாவிலுள்ள நதிக்குகைக்குள் மான்கள் அடிக்கடி செல்வதாலும் வேட்டைக்காரர்கள் அவற்றைத் துரத்திச் செல்வதாலுமே அதற்கு 'மான்குகை' என்னும் பெயர் வந்தது. இந்தக் குகையில் வௌவால்கள், சிலந்திகள், பூரான்கள் மற்றும் பல விஷ ஜந்துக்களும் வாழ்கின்றன. மற்றுமொரு பாரிய குகை லாவோஸ் நாட்டில் உள்ளது. சே பாங் ஃபாய் (Xe Bang Fai) என்று அழைக்கப்படும் இந்தக் குகையில் பல பெரிய அறைகள் காணப்படுகின்றன.

இந்த நதிக்குகையில் 25 செ.மீ அளவிலான பெரிய சிலந்திகள் காணப்படுகின்றன. இதன் கூரைப்பகுதியில் உயர்ந்த கூம்பு வடிவங்கள் காணப்படுகின்றன. அதனால், இந்தக் குகையின் ஒரு பகுதி 'தேவாலயம்' என்று அழைக்கப்படுகிறது.

-ராஜா

## 35,000 வருட பழைமைமிக்க புல்லாங்குழல்



இதுவரை காலமும் கண்டுபிடிக்கப்படாத பழைமைமிக்க இசைக் கருவிகளின் சிதைவுகளை புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். தென்மேற்கு ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இவற்றில் புல்லாங்குழல்களும் அடங்குகின்றன. இவை 35,000 வருடகால பழைமை மிக்கவையாகும். இந்தப் புல்லாங்குழல்கள் எலும்புகள் மற்றும் யானைத்தந்தம் என்பனவற்றால் செதுக்கி எடுக்கப்பட்டவையாகும்.

இந்தக் கண்டுபிடிப்பில் இருந்து பழங்கால மக்கள் எந்த அளவுக்கு இசையில் ஆர்வம் மிக்கவர்களாக இருந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. இந்த இசைக்கருவிகளின் சிதைவுகள் குகையொன்றிலிருந்தே அகழ்தெடுக்கப்பட்டுள்ளன.

## முகம் பார்க்கும் கண்ணாடி



முகம் பார்க்கும் கண்ணாடியின் வரலாற்றை நோக்குவோமானால் அது புராதன காலத்தை நோக்கிச் செல்கின்றது. ஆரம்பத்தில் மனிதன் குளம், ஏரிகள் மற்றும் ஆறுகளையே தனது விம்பத்தை பார்ப்பதற்குப் பயன்படுத்தியுள்ளான். காலப்போக்கில் நன்கு மெருகேற்றப்பட்ட கல் மற்றும் உலோகங்களையே மனிதன் முகம் பார்க்கும் கண்ணாடியாக



உபயோகித்துள்ளான். அதன்பின்னர் உலோகத்துக்கு ரசாயனத்துடன் கண்ணாடியும் சேர்த்து விம்பம் பிரதிபலிக்கும் வகையிலான முகம் பார்க்கும் கண்ணாடிகளைத் தயாரிக்கலானான். இன்றும் நவீன கண்ணாடி வகைகள் தயாரிப்பதற்கு இந்த முறையே பின்பற்றப்படுகிறது.

கல்லால் தயாரிக்கப்பட்ட புராதன காலத்து கண்ணாடிகள் துருக்கியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி 600 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்று தெரியவருகிறது. இதேவேளை, தென் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல் கண்ணாடிகள் கி.பி 2000 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்று தெரிகிறது.

## குயிலோசையும் விடைபெறும் நிலை



அருகிவரும் பறவை இனங்களில் குயில் இனங்களும் சேர்ந்துள்ளதால் இனிய குயிலோசையைக் கேட்கும் நிலையும் படிப்படியாகக் குறைந்து வருகிறது. மிகுந்த ஆபத்தை எதிர்நோக்கும் பறவை இனங்களின் பட்டியலில் குயில் இனமும் சேர்க்கப் பட்டுள்ளது.

வசந்த காலத்தை முன்கூட்டியே அறிவிப்பதில் பல நூற்றாண்டு காலமாகப் பிரபல்யம் பெற்றவை குயில் இனங்கள். தற்போது, குயில்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டது. ஆபிரிக்காவைப் பொறுத்தவரை வருடாந்தம் குளிர்கால இடப்பெயர்வுக்குப் பின்னர் சுமார் 20,000 குயில்களே திரும்பி வருகின்றன என்று இயற்கைவள பாதுகாப்பு வல்லுனர்கள் கணக்கிட்டுள்ளனர். இது கடந்த 15 வருடகாலத்தில் ஏற்பட்ட 40 சதவீத வீழ்ச்சி என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர்களுக்கான 'கிட்மெயில்' அறிமுகம்





இன்டர்நெட் எனப்படும் இணையத்தின் வழியே அநேகமான விடயங்களை பார்ப்பதற்கு பெற்றோரினால் பிள்ளைகளுக்குத் தடைவிதிக்கப்படுகின்றது. விசேடமாக 'ஈமெயில்' பாவனையைக் குறிப்பிடலாம். 'ஈமெயில்' ஊடாக தீய நண்பர்களின் தொடர்புகள் உட்பட வழிதவறிச் செல்லக்கூடிய பல விடயங்கள் இவர்களை ஆக்கிரமித்து விடுகின்றன.

எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டே சிறுவர்களுக்கென்றே 'ஈமெயில்' முறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இச்செய்தியானது சிறுவர், பெற்றோர் ஆகியோருக்கு மகிழ்ச்சியான செய்தியாகவே இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

பெரியவர்களுக்கு 'ஜிமெயில்' என்பது போல சிறுவர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக இந்த 'மெயில்' அமைந்துள்ளது எனலாம். பொதுவான 'ஈமெயில்' கொண்டுள்ள இன்பொக்ஸ், மெயில்பொக்ஸ் பொம்போஸின் ஆகிய அனைத்தும் இந்த சிறுவர்களுக்கான மெயிலிலும் உள்ளன. இவை எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் என்னவென்றால், சிறுவர்களுக்கான இந்த 'ஈமெயிலை' அவர்களின் பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள்-மேற்பார்வையின் கீழ் வைக்கமுடியும் என்பதாகும்.

சிறுவர்களது ஈமெயிலுக்கு வருகின்ற அனைத்து விடயங்களும் சேமிக்கப்பட்டு அவை பெற்றோரின் பாவனையிலுள்ள ஈமெயிலுக்கு உட்செலுத்தப்படுகின்றது. எனவே, அவற்றை பார்வையிடுகின்ற பெற்றோர் தாம் விரும்பினால் மாத்திரமே மேற்படி ஈமெயிலை தமது பிள்ளைகள் பார்க்கக்கூடியவாறு அனுமதியை வழங்கமுடியும் அல்லது குறித்த ஈமெயிலில் தணிக்கை செய்யப்படவேண்டிய விடயங்கள் இருந்தால் அவற்றை தணிக்கை செய்தபின்னர் அந்த ஈமெயில் பிள்ளைகளின் ஈமெயில் சேவையை சென்றடையும்.

அதுமட்டுமன்றி, பெற்றோர் விரும்புகின்ற குறித்த ஒரு வரையறை செய்யப்பட்ட நேரத்தில் மாத்திரம் பிள்ளைகள் இந்த ஈமெயிலை பார்வையிடக்கூடியவாறு அதனை நெறிப்படுத்திவிடவும் முடியும்.

தடை செய்யப்பட்ட படங்கள், தீய வார்த்தைகள் அனைத்தையும் 'ப்ளொக்' செய்து வேண்டியதை மாத்திரமே, பிள்ளைகளுக்கு வழங்கககூடியவாறு மேற்படி ஈமெயில் சேவை அமைந்திருப்பது சிறப்பம்சமாகவே கருதப்படுகின்றது.

சிறுவர்களுக்கான இந்த 'கிட்மெயில்.கொம்' ஆனது அவர்களின் மனதைக் கவரும் வகையில் வடிவமைப்பைக் கொண்டிருப்பதுடன், 'கிட்மெயிலை' பாவிக்கின்ற சிறுவர்கள் பெரியவர்களானதும் மிக இலகுவாகவே ஏனைய 'ஈமெயில்' சேவையையும் பார்வையிடக்கூடிய, கையாளக்கூடிய பக்குவத்தைப் பெற்றுவிடுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.




**பெற்றோரின் மேற்பார்வையின்கீழ் வைத்திருக்க முடியும் என்பதே இதன் சிறப்பம்சமாகும்**




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, ஜூலை மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 29, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org